இணைப்பு 03

2020 ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதிய 2196/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி நியமிக்கப்பட்ட சனாதிபதி செயலணியினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது

# நிர்மாணக் கைத்தொழில்களுக்காக பயன்படுத்தப்படும் கனிப்பொருட்களின் அகழ்வு,கொண்டு செல்லல் மற்றும் வியாபாரம் பற்றிய செயற்பாட்டுக் கோவை

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் புவி வளங்கள் பற்றிய சனாதிபதி செயலணியினல் வெளியிடப்பட்டது

## முன்னுரை

அபிவிருத்தி முன்னுரிமைகள்,தனிப்பட்ட தொழில்முயற்சிகள்,சிறிய சுயதொழில்கள் மற்றும் பாரம்பரிய தொழில்களில் ஈடுபடுபவர்களின் பொருளாதார தேவைகளுக்காக புவி வளங்களைப் பயன்படுத்தல் மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் மூலாதாரங்கள் மற்றும் திறமுறைகளை கற்றாராய்வதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2020 ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதிய 2196/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி நியமிக்கப்பட்ட சனாதிபதி செயலணியினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை கருத்திற்கொண்டு, சொல்லப்பட்ட புவி வளங்களை அகழ்தல் , கொண்டு செல்லல் மற்றும் வியாபாரம் என்பவற்றிற்காக இருந்து வந்த செயல்நெறியினால் பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள் போன்று நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் ஆகியன எதிர்கொண்ட அசௌகரியங்களை தவிர்த்து சூழல் பாதுகாக்கப்படும் வகையில் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்நெறியொன்றை அறிமுகப்படுத்துவதற்காக ......... ஆம் திகதிய .......... ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட கட்டளையின்படி இச் செயற்பாட்டுக் கோவை வெளியிடப்படுகிறது.அதற்கிணங்க, கருங்கல்,மணல்,மண்,சரளைக்கல் மற்றும் களிமண் ஆகியன பற்றிய ஆராய்ச்சி, அகழ்தல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல் மற்றும் வியாபாரம் என்பவற்றிற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் இத் திறமுறைகளின்படி மேற்கொள்ளப்படும்.

2021 ............... மாதம் ..... ஆந் திகதி வரையிலான கருங்கல்,மணல்,மண்,சரளைக்கல் மற்றும் களிமண் ஆகிய மூலப்பொருட் பயன்பாடு தொடர்பான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ∴ கட்டளைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றில் உள்ளடங்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இச் செயற்பாட்டுக் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது. பரிசீலனையின் வசதி மற்றும் சிக்கல் தன்மையை குறைப்பதற்காக 2009 ஆண்டு 66 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1992 ஆண்டு 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் தேவைப்படும் கட்டளைகள் மற்றும் படிவங்கள் மட்டும் இக்கோவையில் காட்டப்பட்டுள்ளன.

வரைவிலக்கணத்தின் போது சந்தேகம் ஏற்படும் இடங்கள் மற்றும் பிரச்சினைகளையும் இவ் ஏற்பாடுகளுக்கு உள்ளடங்காத விடயங்களையும் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

புவி வளங்கள் பற்றிய சனாதிபதி செயலணி
2021............ மாதம்...... ஆந் திகதி

**சனாதிபதி செயலணியின் அங்கத்துவம்**

**திரு.ஜே.ஜே.ரத்னசிறி**
தலைவர்/செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**திரு.அனில் ஜயசிங்க**
உறுப்பினர்/செயலாளர், சுற்றாடல் அமைச்சு
**திரு.ஆர்.டபிள்யு.ஆர்.பேமசிறி**
உறுப்பினர் /செயலாளர், வீதி அமைச்சு
**திரு.ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க**
உறுப்பினர் /செயலாளர், காணி அமைச்சு
**திரு.அநுர திசாநாயக்க**
உறுப்பினர் /செயலாளர்,நீர்ப்பாசன அமைச்சு
**திரு.எஸ்.டி.ஏ.பி.பொரலஸ்ஸ**

உறுப்பினர் /செயலாளர்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) திரு.டப்ளிவ்.பி.பி.**பர்னான்டோ**

உறுப்பினர் /செயலாளர்,வனசீவராசிகள்,பாதுகாப்பு,யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் அடங்கலான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள், அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

திருமதி.ஆர்.எம்.சீ.எம்.ஹேரத்

உறுப்பினர், மகாவலி வலயங்கள் சார்ந்த வாய்க்கால்கள் மற்றும் குடியேற்றப் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

திருமதி.ஏ.எஸ்.இலங்கம்கே

உறுப்பினர் /பணிப்பாளர் நாயகம், காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

**திரு.அநுர வல்பொல**

உறுப்பினர்/தலைவர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

**திரு.பி.பீ.ஹேமந்த ஜயசிங்க**

உறுப்பினர் /பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை

**திரு.ஹர்ஷான் டி சில்வா**

உறுப்பினர் /தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை

**திரு.விஜித்த குணரத்ன**

உறுப்பினர் /பிரதி பொலிஸ்மா அதிபர்/சுற்றாடல் திசை

**திருமதி.மலர்மதி கங்காதரன்**

உறுப்பினர் / மேலதிக பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்

**திரு.கே.ஆர்.கங்காதர**

செயலாளர், சனாதிபதி செயலணி

## தொழில்நுட்ப உதவி

| | |
|---|---|
| திரு.டபிள்யு.சீ.எஸ்.சீ.வெலிவத்த | மேலதிகச் செயலாளர், சுற்றாடல் அமைச்சு |
| திரு.ஈ.எம்.யு.எஸ்.ஏக்கநாயக்க | பிரதம கணக்காளர், சுற்றாடல் அமைச்சு |
| திரு.சந்தன சூரியபண்டார | பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |
| திரு.ஜீ.டி.கீர்த்தி கமகே | காணி ஆணையாளர் நாயகம், காணி அமைச்சு |
| திரு.டபிள்யு.எம்.எம்.பி.வீரசேகர | பணிப்பாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| கலாநிதி திரு.கே.எம்.ஏ.பண்டார | வனப் பாதுகாப்பு நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் |
| திரு.ஆர்.ஏ.எஸ். ரணவக்க | பணிப்பாளர் நாயகம், கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் |
| திரு.டி.சஜ்ஜன டி சில்வா | பணிப்பாளர் நாயகம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் |
| திரு.டப்.ஆர்.பரணகம | மேலதிகப் பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம் |
| திருமதி.எம்.எல்.எஸ்.தரங்கா | பிரதிப் பிரதம மதிப்பீட்டாளர், மதிப்பீட்டுத் திணைக்களம் |
| திருமதி.ஹேமா லியனஆராச்சி | பணிப்பாளர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் |
| திரு.அஜித் பிரேமா | பணிப்பாளர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் |
| திரு.டி.எச்.எஸ்.குமாரசிறி | பணிப்பாளர்,வனங்கள் பாதுகாப்புத் திணைக்களம் |
| கலாநிதி திரு.எச்.ஏ.ஜீ.ஜயதிஸ்ஸ | பணிப்பாளர், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு |
| திரு.எச்.டி.சிசிர ஹப்புஆராச்சி | பிரதிப் பணிப்பாளர், காணிப் பயன்பாடு சீர்திருத்த / திட்டமிடல் அமைச்சு |
| திருமதி இந்திரா ஜயவர்த்தன | பணிப்பாளர், இலங்கை மகாவலி அதிகாரசபை |
| திரு.எச்.கே.எம்.குணசேகர | பிரதம அகழ்வுகள் பொறியியலாளர், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணிப்பாளர் |
| திரு.எஸ்.கே.லேனதுவ | வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை |
| திரு.டபிள்யு.எச்.கே.டி.ரத்நாயக்க | பணிப்பாளர்,பெருந்தெருக்கள் அமைச்சு |
| திரு.டபிள்யு.பி.சி.ஏ.வீரசூரிய | சிரேட்ட உதவிச் செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு |
| திருமதி நில்மினி அத்தனகல்ல | பணிப்பாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| திரு.பிரதீப் எதிரிசிங்க | பணிப்பாளர், காணி சீர்திருத்த ஆணைக்குழு |

| | |
|---|---|
| திரு.என்.கே.எல்.நெத்திகுமார | கருத்திட்டப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| திரு.வி.பி.விஜேதுங்க | பிரதி வெடிக்கும் பொருட்கள் கட்டுப்பாட்டாளர் |
| திருமதி ஹிமாலி டி கொஸ்தா | உதவிப் பணிப்பாளர், சுற்றாடல் அமைச்சு |
| திருமதி நில்மனி விக்கிரமரத்ன | உதவிப் பணிப்பாளர், சுற்றாடல் அமைச்சு |
| திருமதி வஜிரா குமாரசிங்க | உதவிப் பணிப்பாளர், மத்திய சுற்றாடல் அமைச்சு |
| திரு.அசந்த குணசேகர | ஆணையாளர், காணி ஆணையாளர் திணைக்களம் |
| செல்வி பஞ்சாலி பிரணாந்து | சட்ட உத்தியோகத்தர், கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் |
| செல்வி சமிந்தி குடாஹெட்டி | சிரேட்ட நீர்புவி விஞ்ஞானி, தேசிய நீர்வளங்கள் சபை |
| திருமதி வாசனா பிரேமசந்திர | ஆராய்ச்சி உத்தியோகத்தர், தொல்பொருளியல் திணைக்களம் |
| திரு.சரத் குணதிலக்க | பிரதிப் பணிப்பாளர், தேசிய அருங்கலைகள் பேரவை |
| திருமதி.எஸ்.விக்கினேஸ்வரன் | நீர்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் |
| செல்வி தனுக்ஷா அபேவர்த்தன | சிரேட்ட ஆலோசகர், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் |

## பொருளடக்கம்


முன்னுரை

விசே.. வரைவிலக்கணம்

விசேட ஏற்பாடுகள்

செயற்பாட்டு கோவைக்கான திருத்தங்கள்

01.முதலாம் அத்தியாயம்

அகழ்வு இடங்கள்; அவகாசங்களை இனம்காணுதல் மற்றும் ஒன்றுபட்ட தாபனக் கட்டமைப்பு

1.1 அகழ்வு இடங்கள் மற்றும் அவகாசங்களை இனமறிதல்

1.2 "PIP2P3" முன்னுரிமைகள் வகுப்பீட்டுப் பதிவேடு

1.3 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் பணியகத்தில் வேலைப்பளு

1.4 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் வேலைப்பளு

1.5 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்களின் வேலைப்பளு

02.இரண்டாம் அத்தியாயம்

அனுமதிப் பத்திர வகைகளும் அனுமதிப் பத்திரம் வழங்கும் சட்டரீதியான செயல்நெறியும

2.1 அனுமதிப் பத்திரங்களை வழங்கல்

2.2 அனுமதிப் பத்திரவகைகள்

2.2.1 ஆராய்ச்சி அனுதிப்பத்திரங்கள்

2.2.2 அகழ்வு அனுதிப்பத்திரங்கள்

2.2.3 வியாபார அனுமதிப்பத்திரங்கள்

2.2.4 பண்டசாலை அனுமதிப்பத்திரங்கள்

2.2.5 கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள்

2.2.6 ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள்

2:3 அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம்

2.4 அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

2.5 அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்நெறி

2.5.1 அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்காக முன்னளிக்க வேண்டிய ஆவணங்கள்

2.5.2 ஆகழ்வு விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டதன் பின்னரான அலுவல்கள்

2.5.3 பணியகத்தின் உத்தியோகபூர்வ அனுமதிப்பத்திரக் கூறின் பணிப்பொறுப்பு

2.5.4 அகழ்வு விண்ணப்பங்கள் தொடர்பான வகுப்பீடும் தடைநீக்கத்திற்கான அழைப்பும்

2.5.5 விண்ணப்பங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தலும் அதற்கு எதிரான மேன்முறையீடுகளும்

2.5.6 அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்

2.6 அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் செயல்நெறி

2.7 குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்து பாவனையாளர்களுக்கு வசதியான விலக்கு மணல் வழங்கல்
(விசேட மணல் அகழ்வு வலயங்கள் / மணல் நிலையங்கள்

03.மூன்றாம் அத்தியாயம்

**அரச காணிகளின் உரிமை / முகாமைத்துவம் கொண்டுள்ள நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் அக்காணிகளின் பயன்பாட்டிற்காக இணக்கத்தை தெரிவித்தல்**

3.1 அரச காணிகள்

3.2 தனியார் காணிகள்

04.நான்காம் அத்தியாயம்

ஆரம்பக் கட்ட சுற்றாடல் பரிசோதனைகளை, கற்றாராய்தல், சுற்றாடல்சார் அழுத்தச் செயற்பாடு மற்றும் ஏனைய தடைநீக்கங்கள் (பதிவுசெய்யப்பட்ட இடங்கள்)

4.1 சுற்றாடல் ரீதியான பரிந்துரை

4.2 ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரிசோதனைகள் /சுற்றாடல் அழுத்தங்களை மதிப்பிடுதல்

4.3 தொல்பொருள் பரிந்துரை தொல்பொருள் /அழுத்தங்களை கற்றாராய்தல்

4.4 தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் மண்சரிவு ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் அறிக்கைகள்

4.5 தேசிய நீர்வளங்கள் சபையினால் மேற்கொள்ளப்படும் நிலத்தடி நீர் வளங்களின் உணர்வுத்தன்மை

4.6 நகர அபிவிருத்தி வலயங்களினுள்ளான நகரத்திட்டங்களைத் தீர்க்கும் அறிக்கைகள்

05. ஐந்தாம் அத்தியாயம்

அபிவிருத்திக் கருத்திட்டங்கள்,சுயதொழல்கள் மற்றும் பாரம்பரிய தொழில்கள், சிறுபொருளாதார வாழ்வாதார தேவைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் / உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல் (பதிவு செய்யப்படாதவை)

5.1 களிமண் அகழ்வு மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேசச் செயலாளரால் சிறு அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்கல்.

5.2 மண் அல்லது சரளைக்கல் அகழ்தல் மற்றும் கொண்டு செல்வதற்காக கிராம உத்தியோகத்தரினால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

5.3 மண் அல்லது சரளைக்கல் அகழ்தல் மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேச செயலாளரால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

5.4 கருங்கல்,அகழ்தல் மற்றும் கொண்டுசெல்வதற்காக பிரதேசச் செயலாளரால் அனுமதிப்பத்திரங்களை வழங்கல்

5.5 மணல் அகழ்வு மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேசச் செயலாளரால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்கல்

5.6 அரசின் விசேட கருத்திட்டங்களுக்கு மண் மற்றும் சரளைக்கல் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளரால் /அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களினால் அனுமதிப்பத்திரம் வழங்குதல்

5.7 பதிவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பான பொது ஆலோசனைகள்

5.7.1 பதிவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் மாவட்டச் செயலாளரின் பணிப்பொறுப்பு

06. ஆறாம் அத்தியாயம்

அனுமதிப்பத்திரங்கள்/ தடைநீக்கக் கட்டணங்கள், வேறு கட்டணம் அறவிடல், மீளச் செலுத்துதல் மற்றும் கணக்கிலிடுதல் பற்றிய ஒற்றைத் திறமுறை

6.1 ஒற்றைக் கட்டண முறையும் தடைநீக்கக் கட்டணங்களும்

6.1.1 உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்படும் வரிகளும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களும்

6.1.2 அரச காணிகளை முகாமை செய்கின்ற நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் அறவிடப்படும் கட்டணங்கள்

6.1.3 ஒற்றைக் கட்டளை முறையில் உள்ளடங்காத கட்டணங்கள்

6.1.4 புனரமைப்பு அல்லது மீளத்தாபித்தல் பணிகளுக்கான பாதுகாப்பு வைப்புகள்

6.1.5 அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் /அரசுரிமை

6.2 மீளச் செலுத்துதல் மற்றும் கணக்கிலிடுதல்

07. ஏழாம் அத்தியாயம்

**சுற்றாடல் ரீதியான பிரச்சினைகள், மக்களின் எதிர்ப்புகளை முகாமை செய்தல், கண்காணித்தல் மற்றும் செயன்முறைகள்**

7.1 சுற்றாடல் ரீதியான பிரச்சினைகளை குறைத்தலும் தீர்த்து வைத்தலும்

7.2 பாரிய அளவிலான அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் புவி வளங்களைப் பயன்படுத்தலும்

7.3 பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களை முகாமை செய்தல்

7.4 புவி வளங்களை அகழ்தல் பற்றிய தேசிய கண்காணிப்புக் குழு

7.5 குறுகியகால செயன்முறைகள்

**இணைப்புகள்**

## விசேட வரைவிலக்கணம் கூறல்

இக்கோவையின் கீழ் விபரிக்கப்படுகின்ற "புவி வளங்கள் / கனிப்பொருட்கள்' என்பது கட்டுமாணங்கள் மற்றும் கைத்தொழில்களுக்காக பயன்படுத்தப்படும் "கருங்கற்கள், மணல், மண், சரளைக்கல், மற்றும் களிமண்" என்னும் இயற்கை வளங்களைக் குறிக்கிறது.

"பதிவு செய்யப்பட்ட" என்பது வர்த்தக ரீதியில் கருங்கற்கள், மணல், மண், சரளைக்கல், மற்றும் களிமண் என்பவற்றை அகழ்வதற்காக ஆரம்பத்தில் இனம்காணப்பட்ட அல்லது வாணிப நோக்கங்களுக்காக மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் தனியார் அல்லது அரசு வசமான காணிகளில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட புவி வளங்களை உபயோகிக்கும் சந்தர்ப்பங்களை குறிக்கின்றது. அதற்காக உபயோகிக்கப்படும் வலயங்கள் அல்லது இடங்கள் "பதிவு செய்யப்பட்ட வலயங்கள் / இடங்கள்" ஆகும். "தேர்ச்சி பெற்ற அல்லது தொழில்நுட்ப" எனும் தொகுப்பின் கீழ் கோரப்படும் அகழ்வு வலயங்கள் அல்லது இடங்கள் பதிவு செய்யப்பட்ட இடங்களில் உள்ளடங்குகின்றது.

"பதிவு செய்யப்படாத" என்பது வார்த்தகமல்லாத சிறிய மற்றும் பாரம்பரிய அத்துடன் வேறு விசேட கருமங்களுக்காக மேற்கொள்ளப்படும் புவிவளங்களை உபயோகிக்கும் சந்தர்ப்பங்களை குறிக்கின்றது. அதற்காக பயன்படுத்தப்படும் வலயங்கள் / இடங்கள் "பதிவு செய்யப்படாத வலயங்கள் / இடங்கள் எனப் பொருட்படுகிறது. பதிவு செய்யப்படாத வலயங்களில் / இடங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் அல்லது அத்தகைய சந்தர்ப்பங்கள் என்பது,

(i) அன்றாட மக்கள் வாழ்வைப் பேணும் போது நிதிசாராத பொதுமக்களில் செயல் காரணமாக அல்லது அதற்காக அல்லது இயற்கை செயலொன்றின் காரணமாக அல்லது எழுகின்ற புவிவளங்களை அகற்றும் சந்தர்ப்பங்கள்,

(ii) அனர்த்த நிலைமைகள் காரணமாக அழிவடைந்த வீடுகள் /சொத்துக்களை மீண்டும் முன்னிருந்த நிலைமைக்கு கொண்டு வருவதற்கான பணிகள்,

(iii) மண் சரிவு ஏற்படக் கூடிய திடீர் விபத்துக்கு உள்ளாகக் கூடிய உயிர்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு எச்சரிக்கையாக அமையக் கூடிய சந்தர்ப்பங்கள்,

(iv) தனிப்பட்ட பிரயோசனத்துக்காக கட்டிடமொன்றை நிர்மாணித்தலுடன் சம்பந்தப்பட்ட (வணிக ரீதியான உடன்பாட்டின் பேரில் அல்லாத) செயல்பாடுகள்,

(v) அரசினால் செயற்படுத்தப்படும் (வரையறுக்கப்பட்ட) பிரதேச ரீதியிலான அல்லது மாவட்ட ரீதியிலான அபிவிருத்திப் பணிகள்,

(vi) வர்த்தகமல்லாத / நேரடி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அரசாங்க கருத்திட்டங்கள்,

(vii) வர்த்தக நோக்கம் அல்லாத சேதனப் பசளை உற்பத்தி மற்றும் செய்கை துறையாக சேறுகள் மற்றும் மண்களை பயன்படுத்தல், சிறிய அளவிலான கம்த்தொழில் வாழ்வாதாரச் செயல்கள் என்பவற்றுடன் தொடர்பான புவி வளங்களை உபயோகிக்கும் சந்தர்ப்பங்கள் ஆகும்.

"இடங்கள்" என்பது வலயங்களைக் குறிக்கின்றது.

"தடைநீக்கங்கள்" என்பது நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்களினால் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்கு உரியதாக முன்னரும் பின்னருமாக வழங்கப்படும் காணி பயன்பாட்டு

இணக்கங்கள், பரிந்துரைகள், அனுமதிகள், மதிப்பிடங்கள், அறிக்கைகள், அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களைக் குறிக்கின்றது.

"நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்கள்" என்பது 2009 ஆண்டு 66 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1992 ஆண்டு 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டம் மற்றும் 1980 ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தடை நீக்கத்துடன் தொடர்பான இணைப்பு 01 இன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியதிச் சட்டமுறையான அரச நிறுவனங்களைக் குறிக்கின்றது.

"திகதி" என்பது கடமை திகதியையும், "மாதம்" என்பது பஞ்சாங்க மாதமொன்றையும் குறிக்கின்றது.

"கருத்திட்டம்" என்பது கனிப்பொருட்கள் அகழ்வுச் செயற்பாட்டையும் குறிக்கின்றது.

"கட்டளைகள்" என்பது 2009 ஆண்டின் 66 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1992 ஆண்டின் 33 ஆம் இல்க்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் குறிக்கின்றது.

## விசேட ஏற்பாடுகள்

I. இச்செயற்பாட்டுக் கோவையானது "நிர்மாணக் கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் கனிப்பொருட்கள் அகழ்தல்,கொண்டு செல்லல், மற்றும் வியாபாரம் தொடர்பான செயற்பாட்டுக்கோவை" என பொருட்படுகிறது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் திகதியிலிருந்து இச் செயற்பாட்டுக் கோவை நடைமுறைப்படும்

II. சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள "புவி வளங்கள் தொடர்பான தேசிய கண்காணிப்புக்" குழுவின் இணக்கப்பாடின்றி எதுவித நியதிச்சட்ட அரச நிறுவனமோ அல்லது நியதிச்சட்ட முறை குழுவோ / அமைப்போ / சங்கமோ இக் கோவையின் விடய எல்லைக்கு அழுத்தம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் தன்னிச்சையாக தீர்மானங்களை எடுத்தலாகாது. திருத்தங்களை மேற்கொள்ளளுதலாகாது.

1. திறைசேரியின் செயலாளரது அங்கீகாரமின்றி இங்கு குறிப்பிட்டுள்ள கட்டணங்களுக்கு புறம்பாக கட்டணம் அறவிடப்படலாகாது. கட்டணங்களை திருத்தலாகாது.

11. திறைசேரிச் செயலாளர் மற்றும் "புவி வளங்ள் பற்றிய தேசிய கண்காணிப்புக் குழுவுடன்" தொடர்பு கொள்ளாமல் எடுக்கப்படும் தீர்மானங்கள் வலுவற்றதாகும். அதேபோன்று சொல்லப்பட்ட நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளாது சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் மற்றும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமும் இச் செயற்பாட்டுக் கோவையின் ஏற்பாடுகளை திருத்தமாட்டாது.

III. இச்செயற்பாட்டுக் கோவையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திறமுறையை தாபிக்கக் கூடியவாறு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் இதற்கு முன்னராக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் 1993 ஆண்டு 01 ஆம் இலக்க சுரங்க அகழ்வு(அனுமதிப் பத்திரம் வழங்கும்) கட்டளை (திருத்தப்பட்ட)யும் அடங்கலான ஒழுங்குவிதிகள் / கட்டளைகள் என்பவற்றை திருத்தவும் அதிகாரங்களை பகிரவும் 2021.09.30 ஆம் திகதிக்கு முன்னராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

IV. புவி வளங்களை அகழ்தல், கொண்டு செல்லல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் செயல்நெறியின் போது தேவையான தடைநீக்கங்களை வழங்குவதற்காக "ஒன்றுபட்ட தாபன கட்டமைப்பு" நடைமுறைபடுதல் வேண்டும். குறித்த தாபனக் கட்டமைப்பு, சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் நடைமுறைப்படுத்த வேண்டும்.

V. அகழ்வுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் செயல்நெறியின் போது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அத்துடன் தொடர்புடைய நியதிச்சட்ட முறை அரச நிறுவன்ங்களினால் வெளியிடப்படும் தடைநீக்கத்திற்காக தேவையான கட்டணங்களை விண்ணப்பதாரர்களிடம் இருந்து அறிவிடுவதற்காக "ஒற்றை கட்டணமுறை" செயற்படுத்தப்பட வேண்டும். குறித்த முறையின் மைய நிறுவனமாக புவிச்சரிதவியல்

அளவை மற்றும் சுரங்கப் பணியகம் செயற்படல் வேண்டும். கட்டணங்களை அறவிடும் திறமுறையானது திறைசேரியின் வழிகாட்டலின் கீழ் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், சுற்றாடல் அமைச்சு உட்பட தொடர்புடைய நியதிச்சட்டமுறை அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்த வேண்டும்.

VI. "ஒற்றையான தாபன முறை மற்றும் ஒற்றைக் கட்டண முறைக்கு" அமையும் வகையில் தொடர்புடைய நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் தமது உள்ளக வேலை ஒழுங்குகளை தயாரித்துக் கொள்ள வேண்டும். இவ் "ஒற்றைத் திறமுறைகள்" நடைமுறைப்படுவது "பதிவு செய்யப்பட்ட" இடங்களுக்காக மட்டுமாகும்.

VII. அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலம் பொதுமக்களுக்கு நேரடி அத்துடன் பெரும் நலன்கள் கிடைக்கப் பெறுவதால் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக கோரப்படும் அகழ்வுகள் மற்றும் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் செயல்நெறியின் போது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உட்பட தொடர்புடைய நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்கள் உரிய அனுமதிப்பத்திரங்களுக்கு /தடைநீக்கங்களுக்கு உயர்ந்தபட்ச முன்னுரிமை வழங்கி குறைந்த காலத்திற்குள் அவற்றை வழங்குவதில் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

VIII. புவி வளங்களை அகழ்தல், கொண்டு செல்லுதல் மற்றும் வியாபாரம் பற்றிய செயற்பாட்டுக் கோவையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைப் பிரசுரங்களை வெளியிடுதல், படிவங்களை அறிமுகம் செய்தல் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான பயிற்சி வழங்கல் முதலியன சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டலின் கீழ் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### செயற்பாட்டுக் கோவைக்காக செய்யப்படும் திருத்தங்கள்

IX. இச்செய்பாட்டுக் கோவைக்காக செய்யப்படும் திருத்தங்கள் யாவும் புவி வளங்கள் தொடர்பான சனாதிபதி செயலணி நடைமுறையில் இருக்கும் காலத்திற்குள் குறித்த செயலணியினாலும் அதற்குப் பின் "புவி வளங்கள் தொடர்பான தேசிய கண்காணிப்புக் குழுவினலும்" அங்கீகரிக்கப்பட்டதன் பின் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 01. ஆம் அத்தியாயம்

### அகழ்வு இடங்கள், அவகாசங்களை இனம்காணுதல் மற்றும் ஒற்றையான தாபனக் கட்டமைப்பு

#### 1.1 அகழ்வு இடங்கள் மற்றும் அவகாசத்தை இனமறிதல்

*அகழ்வு இடங்கள் மற்றும் அவகாசத்தை இனமறிதலும் இற்றைப்படுத்தலும்*

இலங்கையில் நிலைகொண்டுள்ள கருங்கல், மணல்,மண்,சரளைக்கல் மற்றும் மணல் படிவுகளை (இதனகத்துப் பின்னர் "புவிவளங்கள்" எனக் குறிக்கப்படும்) இனம்காணுதலும், அவற்றிற்காக 2009 ஆண்டு 66 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1992 ஆண்டு 33ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டம் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிக்கப்படும்) மற்றும் 1980 ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கமைவாக, அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திறமுறையினுள் சட்டத்தின் 30 மற்றும் 31 ஆம் பிரிவுகளுக்கு அமைய காணிப் பயன்பாட்டு இணக்கங்கள், பரிந்துரைகள், அனுமதிகள், மதிப்பீடுகள், அறிக்கைகள், அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை (இதனகத்துப் பின்னர் "தடைநீக்கங்கள்" எனக் குறிக்கப்படும்) பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்படும் காலத்தை குறைப்பதன் மீது இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகக்குறைந்த அளவிலான தடைநீக்கங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடக்கம் தடைநீக்கங்கள் பலவற்றை பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு புவியியல் விஞ்ஞானத் தகவல் தொகுதிகள் திறமுறைகளை பயன்படுத்தி வரைபடமாக்குதல் மற்றும் அதன்படி அபிவிருத்திக்குத் தேவையான புவிவளங்கள், அகழ்வு இடங்கள் அல்லது வலயங்கள், வழங்கப்பட வேண்டிய தடைநீக்கங்களை அளவுக்கு ஏற்றவாறு முன்னுரிமைப்படுத்துவதற்கும் அத்துடன் தொடர்பான தாபனக் கட்டமைப்பும் இவ் அத்தியாயத்தின் மூலம் விபரிக்கப்படுகிறது.

*பதிவு செய்யப்பட்ட / பதிவு செய்யப்படாத அகழ்வுகள்*

1. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் (இதனகத்துப் பின்னர் பணியகம் எனக் குறிக்கப்படும்) அரசினதும் தனிப்பட்ட உரித்துடையதுமான சொத்துக்களில் அமைந்துள்ள கருங்கல், மணல், மண், சரளைக்கல் மற்றும் களிமண்களை அகழ்வு செய்யக் கூடிய இடங்கள் அல்லது வலயங்கள் "பதிவு செய்யப்பட்டதும்" "பதிவு செய்யப்படாததுமான"வை என இரு தொகுதிகளாக இனம்கண்டு கொள்ள வேண்டும்.

*முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் காணிகளை இனமறிதல்*

2. பணியகத்தின் அறிந்து கொள்ளலின் பேரில் காணிப் பயன்பாட்டுத் திட்டத் திணைக்களமானது சட்டம் மற்றும் 1980 ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 13 தொடக்கம் 21 வரையிலான பிரிவுகளுடன் சம்பந்தப்படும் நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்களின் தடைநீக்கங்களை அடிப்படையாகக் கொண்டும், குறித்த நிறுவனங்களின் இணக்கத்துடனும் "பதிவு செய்யப்பட்ட இடங்கள் / வலயங்களை முன்னுரிமை 1 ஆகவும் முன்னுரிமை 2 மற்றும் முன்னுரிமை 3 ஆகவும் வகுப்பீடு செய்து பதிவு செய்ய வேண்டும்.

**முன்னுரிமைகள் 1(அதாவது P1) இடங்கள்:**

*முன்னுரிமைகள் 1*

3\. 1. தடைநீக்கங்கள் தேவையற்ற அல்லது ஆகக் குறைந்தபட்ச அளவிலான (இந்த அளவானது வகுப்பீட்டுப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ளது) அழைக்க நேரிடும் அகழ்வு இடங்களை முன்னுரிமை 1 (P1) வகுதியில் உள்ளடக்க வேண்டும்.

**முன்னுரிமைகள் P1-A வகுதி**

அகழ்வு செய்ய எதிர்பார்க்கப்படும் இடத்தில் இருந்து 01 கிலோ மீற்றர் எல்லைக்குள்ளான மனித வாழ்விடங்களோ எதுவித நிர்மாணங்களோ இல்லாத அத்துடன் சட்டத்தின் 30 ஆம் பிரிவிற்கமைய தடைநீக்கம் பெறவேண்டிய வகுதிக்கு உட்படாத அல்லது குறித்த தடை நீக்கங்கள் வழங்கப்படாது அல்லது முன்னங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள இடங்களை P1-A வகுதியில் உள்ளடக்க வேண்டும்.

**முன்னுரிமைகள் P1-B வகுதி**

அகழ்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் இடங்களுக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த அளவிலான தடைநீக்கங்களை (இவ்வளவானது வகுப்பீட்டுப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ளது) அழைக்க நேரிடும் இடங்களை / வலயங்களை P1-B வகுதியில் உள்ளடக்க வேண்டும்.

(i) அழைப்புச் செய்ய எதிர்பார்க்கப்படும் இடத்தில் இருந்து 01 கிலோ மீற்றர் எல்லைக்குட்பட்ட மனித வாழ்விடங்கள் அற்ற எனினும் இனம் காணப்பட்ட நிர்மாணிப்புகளுடன் கூடிய பிரதேசமொன்றில் கருங்கல் அகழ்வுக்காக பல்வகை கல்வெடிக் குழிகளில் வெடிக்க வைப்பதாயின் இடத்திலிருந்து 01 கிலோ மீற்றர் அளவிலான வலயத்திற்குள் இருக்கும் நிர்மாணிப்புகள் சேதமடையக் கூடியதால் 1980 ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் ஆரம்பகட்ட சுற்றாடல் கற்றாராய்வு செய்ய வேண்டுமா என்பதை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தீர்மானிக்க வேண்டும்.

இத்தகைய வலயங்கள் P1-B வகுதியில் உள்ளடக்கப்பட வேண்டும்

**முன்னுரிமைகள் 2 (அதாவது P2 ) இடங்கள்:**

*முன்னுரிமைகள் 2*

4\. பணியகத்தினால் பல தடை நீக்கங்களை (இந்த அளவானது வகுப்பீட்டுப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ளது) அழைக்க நேரிடும் அகழ்வு இடங்கள் முன்னுரிமைகள் 2 (P2) வகுதியில் உள்ளடக்க வேண்டும்

**முன்னுரிமைகள் 3 (அதாவது P3 ) இடங்கள்:**

*முன்னுரிமைகள் 3*

5. பணியகத்தினால் அதிகளவிலான தடைநீக்கங்களை (இந்த அளவானது வகுப்பீட்டுப் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ளது) அழைக்க நேரிடும் அகழ்வு இடங்களை முன்னுரிமை 3 (P3) வகுதியில் உள்ளடக்க வேண்டும்

## 1.2 "PIP2P3" முன்னுரி வகுப்பீட்டுப் பதிவேடு

*முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேடு*

6. பதிவு செய்யப்பட்ட எல்லா இடங்களையும் அடிப்படையாகக் கொண்டு அந்தந்த இடங்களுக்குத் தேவையான P1, P2, P3 ஆகிய முன்னுரிமையை காண்பிக்கும் P1P2P3 முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவோடொன்று இருக்க வேண்டும். இவ் வகுப்பீட்டுப் பதிவேடுகளை பேணுவதன் நோக்கமானது புவிவளங்களை அகழ்வதற்காக எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவரால் கோரப்படும் இடத்திற்கு உரியதாக, அந்தந்த நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் முன்னராக இனமறிந்து கொண்ட தடைநீக்கங்களுடன் அவ்விடங்கள் தொடர்பான தரவுகளை நடாத்திச் செல்வதாக இருப்பதால் எந்த நியதிச்சட்ட அரச நிறுவனத்தினால் தடைநீக்கங்கள் கோரப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து கொள்வதற்காக பணியகத்தினால் P1P2P3 முன்னுரிமை பதிவேட்டைப் பயன்படுத்த வேண்டும்.

## 1.3 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் பணியகத்தின் வேலைப்பளு

7. பதிவுசெய்யப்பட்ட இடங்களுக்காக "P1P2P3 வகுப்பீட்டுப் பதிவேட்டை" பேணலும் இற்றைப்படுத்தலும காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவியுடன் பணியகத்தினால் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. பதிவு செய்யப்படாத யாதேனும் மீண்டுவரும் அகழ்வு இடங்கள் இருப்பின் மீண்டுவந்த உடனே அவ்விடங்களையும் "முன்னுரிமைகள் பதிவேட்டில்" உள்ளடக்குவதற்கு பணியகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதற்குத் தேவையான விபரங்களை நியதிச்சட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக பணியகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. வர்த்தக ரீதியிலான அகழ்வுகளுக்காக வருங்காலத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் புதிய இடங்களும் பதிவு செய்யப்பட்ட இடங்களுள் உள்ளடங்கும். குறித்த புதிய இடங்களை இனம்காணும் சந்தர்ப்பங்களில் "P1P2P3 வகுப்பீட்டுப்" பதிவேட்டை திருத்துவதற்காக பணியகம் காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். 70 மற்றும் 71 ஆம் பிரிவுகளின் கீழ் காட்டப்படுகின்ற அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக செய்யப்படும் கனிப்பொருட்கள் அகழ்வுகள் மற்றும் விசேட மணல் அகழ்வு வலயங்கள் / மணல் நிலையங்கள் தொடர்பான செயற்பாடுகள் முதலியனவும் "பதிவு செய்யப்பட்ட" இடங்களில் உள்ளடக்க வேண்டும்.

10. இலங்கையில் கருங்கல்,மணல்,மண்,சரளைக்கல் மற்றும் களிமண் ஆகிய மூலப்பொருட்களை அகழ்வு செய்யக் கூடியதாக இனம் காணப்பட்டுள்ள அல்லது வருங்காலத்தில் இனம்காணப்படும் பதிவுசெய்யப்பட்டுள்ள எல்லா இடங்களும் குறித்த "முன்னுரிமை பதிவேட்டில்" உள்ளடக்க வேண்டும்.

i. இடைக்கால ஏற்பாடாக "முன்னுரிமைகள் வகுப்பீட்டுப் பதிவேட்டை" முதற் தடவையாக இற்றைப்படுத்துவதற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு உதவியளிப்பதற்காக பணியகத்தினால் தொடர்புடைய நியதிச்சட்ட நிறுவனங்களின் கலந்துகொள்ளலுடன் துரித நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ii. நாட்டின் அனைத்து தொல்பொருள் இடங்கள் தொடர்பான தகவல்கள் இற்றைப்படுத்தியிராததால் புதிய அகழ்வு இடங்கள் தொடர்பானவிடத்து மட்டும் குறித்த இடம் எம் முன்னுரிமை வகுப்பீட்டுத் தொகுதியில் உள்ளடங்கியிருப்பினும் தொல்பொருள் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*முன்னுரிமைகள் வகுப்பீட்டின் கீழ் பணியகத்தின் வேலைப்பளு*

11. பணியகத்தினால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் செயற்பாட்டின்போது ஆண்டுக்குரிய முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேடு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் குறித்த பதிவேடு தேவைப்படும் யாதேனும் நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனம் இருப்பின் குறித்த நிறுவனத்திற்கு / நிறுவனங்களுக்கு வழங்குவதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

12. அகழ்வு இடங்கள் தொடர்பாக இற்றைப்படுத்திய தகவல்களுடன் கூடிய பதிவேட்டை ஒவ்வொரு ஆண்டிலும் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கும் நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களுக்கும் வழங்குவதற்காக பணியகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13. பதிவேட்டை இற்றைப்படுத்தும் போது பணியகத்தினால் திரட்டப்படும் தொழில்நுட்ப தகவல்களக்கு மேலதிகமாக பின்வரும் தகவல்களையும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(i) ஒவ்வொரு அகழ்வு இடத்தினதும் / வலயத்தினதும் அமைவு காட்டப்படுகின்ற சரியான நிலத்தொகுதி இலக்க எண்கள்.

(ii) அகழ்வு இடங்கள் அமைந்துள்ள காணியின் உரித்து அல்லது ஆட்சி உரிமை (அரசு வசமான, அரச நிறுவனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் வசமான, தனிப்பட்ட, மதஸ்தலங்கள் வசமான, உரிமை இனம் காணப்படாத, வேறு விதமான உரித்தை / ஆட்சி உரிமையாக குறிப்பிட வேண்டும்.

(iii) அகழ்வு இடங்கள் உரியதாகும் மாவட்டம்,பிரதேச செயலக / கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பற்றிய தகவல்கள்

(iv) கனிப்பொருள் வகை, கொள்ளளவு தொடர்பான தகவல்கள்

(v) தொடர்புடைய அகழ்வு இடத்திலிருந்து 01 கிலோ மீற்றர் வரையிலான சுற்றுவட்டத்திற்குள் வீடுகள் அல்லது வேறு நிர்மாணிப்புகள் உள்ளனவா என்பது பற்றி

(vi) தற்போது அகழ்வு செய்யப்படுகின்ற ஒரு இடமா அல்லது புதியதொரு இடமா என்பது பற்றி

(vii) புதிய அகழ்வு இடங்கள் தொடர்பானவிடத்து, உரிய அகழ்வு இடத்திலிருந்து 360 மீற்றர் (அதாவது 400 யார்) கொண்ட சுற்று வட்டத்திற்குள் தொல்பொருள் ரீதியான இடங்கள் உள்ளனவா என்பது பற்றி

(viii) வெடிப்புப் பரிசோதனைகள், நிலக்கீழ் நீர் வளங்களின் உணர்வுத் தன்மை, மண்சரிவு ஆபத்து பற்றிய மதிப்பீட்டு அறிக்கைகள், நகரத் திட்டங்கள் தொடர்பான தீர்வு அறிக்கைகள், தொல்பொருள் பரிந்துரை, ஆரம்பகட்ட சுற்றாடல் சோதனைக் கற்கைகள் மற்றும் சுற்றாடல் ரீதியிலான அழுத்தங்களை மதிப்பிடுதல் மற்றும் வேறு தடைநீக்கங்களின் தேவைப்பாடு அல்லது குறித்த தடைநீக்கங்கள் அற்ற நிலையிலோ முன்னங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை / வழங்கப்பட்டிராமை பற்றி.

பணியகத்திற்குத் தேவையான வேறு தொழில்நுட்ப தகவல்களை அதேவிதமாக பெற்றுக் கொள்வதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகவல்களுள் முன்னுரிமை வகுப்பீட்டுக்காகத் தேவைப்படுவது எத்தகவல்கள் என்பதை காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அத்தகவல்களை காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு வழங்க பணியகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

14. பணியகத்தினால் இற்றைப்படுத்தப்பட்ட "P1P2P3 வகுப்பீட்டுப் பதிவேட்டை" தொடர்புடைய நியதிச்சட்ட அரச நிறுவனங்களுக்கு வழங்கி உரிய ஆண்டில் சனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னராக அதற்காக ஒத்திசைவை பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக காணிப்பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவி பெற்றுக்கொள்ள வேண்டும்.

15. அகழ்வொன்றிற்காக கோரப்படும் இடம், தற்போதுள்ள "முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேட்டில்" இல்லாவிடின், பணியகம் உடனே அது பற்றி அறிந்து அதனை இற்றைப்படுத்துவதற்காக காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவியைப் பெறவேண்டும்.

## 1.4 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் வேலைப்பளு

16. பணியகத்தினால் ஆண்டு தோறும் இற்றைப்படுத்தப்படுகின்ற அகழ்வு இடங்கள் பற்றிய பதிவேட்டின் அடிப்படையில் அவ்விடங்களை முன்னுரிமையின் பேரில் வகுப்பீடு செய்தலும், "P1P2P3 வகுப்பீட்டுப் பதிவேட்டை" ஒவ்வொரு ஆண்டினதும் சனவரி மாதம் 01 ஆம் திகதி ஆகும்போது பணியகத்திற்கு வழங்குதல் காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் செய்யப்பட வேண்டும.

*முன்னுரிமைகள் வகுப்பீட்டின் கீழ் காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் வேலைப்பளு*

17. காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களமானது, அரசின் காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் வன ஒதுக்கங்கள், நிலத்தடி நீர்வளங்களின் உணர்வுபூர்வத் தன்மை, மண்சரிவு ஆபத்தான பிரதேசங்கள், நகரத்திட்டங்கள் ரீதியான தீர்வுகள், சுற்றாடல் பாதுகாப்பு / உணர்வுப் பிரதேசங்கள் யானை, முகாமைத்துவ பிரதேசங்கள் அல்லது ஆனையிறவு, தொல்பொருள் ரீதியான இடங்கள், தாவரவிலங்கினப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய வன ஒதுக்கங்களின் எல்லையிலிருந்து ஒரு மைல் (கிலோ மீற்றர் 1.6) உள்ளே அமைந்துள்ள தூண்டல் வலயங்கள், வனப்பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள், தேசிய மரபுரிமை வனச்சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலய பிரதேசங்களின் எல்லையிலிருந்து 100 மீற்றர் தூண்டல் வலயங்கள் தொடர்பாக இற்றைப்படுத்திய தகவல்கள் மற்றும்

அட்டவணை 01 ("இணைப்பு" அத்தியாயங்களை பார்க்கவும்) இன் மூலம் காட்டப்பட்டுள்ள, சட்டத்தின் கீழ் தடைநீக்கங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் காட்டப்பட்டுள்ள பிற தடை நீக்கங்களின் தேவைப்பாடு, அல்லது குறித்த தடைநீக்கங்களை வழங்காது முன்னங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை / வழங்கப்பட்டிராமை, முதலியவற்றை உரிய நியதிச்சட்ட முறை அரச நிறுவனங்களிலிருந்து ஆண்டுதோறும் பெற்றுக் கொண்டு முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேட்டை தயாரிக்க வேண்டும்.

(1) அகழ்வு இடங்களுக்குத் தேவையான தொடர்புடைய நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் தடை நீக்கங்களை குறிப்பாக விசாரித்து தேவையற்ற தடைநீக்கங்களை குறைவடையச் செய்து அவ்விடங்களை முன்னங்கீகாரத்துடனான இடங்களாக முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

18. நியதிச்சட்ட அரச நிறுவனங்களிடமிருந்தும் பிரதேசச் செயலாளர்களிடமிருந்தும் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பணியகத்தினதும் ஒத்திசைவுடன் காணிப் பயன்பாட்டுக் கொள்கை திணைக்களத்தினால் முறையான பொறிமுறையொன்று செயற்படுத்தப்படல் வேண்டும்.

19. இற்றைப்படுத்தப்படும் முன்னுரிமைகள் பதிவேட்டை பிரகடனப்படுத்தும் முன் தொடர்புடைய நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களின் ஒத்திசைவை பெற்றுக் கொள்வதற்காக காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் பணியகத்திற்கு உதவி புரிதல் வேண்டும். யாதேனும் ஓர் இடம் அல்லது இடங்கள் தொடர்பாக பிரச்சினை இருப்பின் அது தொடர்பாக அந்நிறுவனங்களினால் மீண்டும் மீளாய்வினை நடாத்தி அதனைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**1.5 முன்னுரிமை வகுப்பீட்டின் கீழ் நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்களின் வேலைப்பளு**

*முன்னுரிமைகள் வகுப்பீட்டின் கீழ் நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களின் வேலைப்பளு*

20. நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களினால் உரிய அகழ்வு இடங்கள் தொடர்பான பணியகத்தின் தகவல்கள் மற்றும் பல்வேறு மூலாதாரங்களை உபயோகித்துப் பெறப்படும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு வெளிக்கள கற்றாராய்வுகளின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு தனது அபிப்பிராயத்தை அதாவது முன்னங்கீகாரத்தை வழங்க இயலுமா, இயலாதா என்பதைக் குறிப்பிட்டு, காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு புவியியல் விஞ்ஞான தகவல் தொகுதிகளை நிரந்தர மென் பிரதியாக (குறித்த தரவுகளை புவியியல் வடிவமைப்புடனான ஒரு கோவையாக ASaGIS Shape File – என்ற முறையில் வழங்க வேண்டும்) ஒவ்வொரு ஆண்டிலும் நவம்பர் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னராக பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

21. பிரிவு 13 இன்படி, பணியகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப தகவல்களும் பின்வரும் தகவல்களும் உள்ளடங்கும் வகையில், ஆகக் குறைந்தது அட்டவணை 01 இன் ("இணைப்பு" அத்தியாயங்களை பார்க்கவும்) தகவல்களை காணிப் பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக பணியகம் மற்றும் தொடர்புடைய நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(i) அகழ்வு இடங்கள் அமைந்துள்ள காணியின் உரித்து அல்லது ஆட்சி உரிமை அரசு வசமாக இருப்பின் அகழ்வுக்காக விடுவிக்கும் காணிப் பயன்பாட்டு இணக்கம் : நிபந்தனைகள் இருப்பின் அவை யாது என்பது பற்றி,

(ii) வெடித்தல் பரிசோதனைகள், சுற்றாடல் பரிந்துரை, நிலத்தடி நீர் வளங்களின் உணர்வுபூர்வத் தன்மை, மண்சரிவு ஆபத்துக்கள் மதிப்பீட்டு அறிக்கைகள், நகரத் திட்டங்கள் தொடர்பான தீர்வு அறிக்கைகள் தொல்பொருள் பரிந்துரை ஆரம்பக் கட்ட சுற்றாடல் சோதனை கற்கைகள் மற்றும் சுற்றாடல் ரீதியான அழுத்தங்களை மதிப்பிடல் மற்றும் பிற தடைநீக்கங்களின் தேவைப்பாடு அல்லது குறித்த தடை நீக்கங்களை வழங்காமலே முன்னங்கீகாரங்கள் வழங்க இயலுமை/இயலாமை பற்றி: நிபந்தனைகள் இருப்பின் அவை யாவை என்பது பற்றி,

22. ஒவ்வொரு ஆண்டிலும் தகவல்கள் இற்றைப்படாவிடின் அது தொடர்பாக காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்காக நியதிச்சட்டமுறை நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*நியதிச்சட்ட முறையான அரச நிறுவனங்களை இனம் காணுதல்*

23. தடைநீக்கங்களை வழங்குவதற்காக பொறுப்புக்களை கொண்டுள்ள உரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் அட்டவணை 01 இன் (தயவுசெய்து "இணைப்பு" அத்தியாயத்தை பார்க்கவும) மூலம் காட்டப்பட்டுள்ளது

## 02. இரண்டாம் அத்தியாயம்

### அனுமதிப் பத்திர வகைகளும் அனுமதிப் பத்திரம் வழங்கும் சட்டரீதியான செயல்நெறியும்

**2.1 அனுமதிப் பத்திரங்களை வழங்கல்**

*அனுமதிப்பத்திரம் வழங்குவதன் சட்டரீதியான நிலைமை*

கனிப்பொருட்கள் ஆராய்வு, அகழ்தல், கொண்டு செல்லல், வியாபாரம், களஞ்சியப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

24. இரத்தினக்கல் மற்றும் பெற்றோலியம் தவிர்ந்த ஏனைய அனைத்து கனிப்பொருட்களுக்காக ஆராய்வு, அகழ்வு, கொண்டு செல்லல், வியாபாரம், களஞ்சியப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.(சட்டத்தின் 27 ஆம் பிரிவு) பணியகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் கனிப்பொருட்களின் வகைகள் அட்டவணை 02 இல் (தயவுசெய்து "இணைப்பு" அத்தியாயத்தைப் பார்க்கவும்) காட்டப்பட்டுள்ளன.

25. அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கட்டளை செயற்படுத்தும் நிர்வாகப் பொறுப்பாளராக பணியகம் செயலாற்றுகிறது. (சட்டத்தின் 28(1) மற்றும் 43 பிரிவுகள்)

*அனுமதிப்பத்திர அதிகாரம்*

26. "பதிவு செய்யப்பட்ட இடங்களுக்காக" அனுமதிப்பத்திரம் வழங்கல் பணியகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், "பதிவு செய்யப்படாத இடங்களிலான (05 ஆம் அத்தியாயத்தில் காட்டப்படும்) அகழ்வுகள், கொண்டு செல்லல் மற்றும் வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக மாவட்டச் செயலாளர், பிரதேசச் செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பணியகத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் 28 ஆம் பிரிவு)

**2.2 அனுமதிப்பத்திர வகைகள்**

27. பணியகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் பின்வருமாறு :

(i) ஆராய்வு அனுமதிப்பத்திரங்கள்
(ii) அகழ்வு அனுமதிப்பத்திரங்கள்
(iii) வியாபார அனுமதிப்பத்திரங்கள்
(iv) களஞ்சிய அனுமதிப்பத்திரங்கள்
(v) கொண்டு செல்லும் அனுமதிப்பத்திரங்கள்
(vi) ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள்

**2.2.1 ஆராய்வு அனுதிப்பத்திரங்கள்**

*ஆராய்வை அறிமுகப்படுத்தல்*

28. கனிப்பொருட்களை ஆராய்வு செய்தல் என்பது யாதேனுமொரு நிலத்தின் மேற்பரப்பிலோ அல்லது உட்புறத்திலுள்ள கனிப்பொருட்களின் அளவுகளை இனம் காணுதலாகும். அதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரமானது ஆராய்வு அனுமதிப்பத்திரம் எனக் குறிக்கப்படுகிறது. கனிப்பொருட்களை ஆராய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கலானது பணியகத்தினால் பின்வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.

*ஆராய்வதற்காக அனுமதிக்கப்படும் எல்லை*

(i) கனிப்பொருள் ஆராய்வுக்காக விண்ணப்பிப்பதற்கு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ தலைமை கூறின் 1:50000 கமத்தொழில் வரைபட வரிசை பயன்படுத்தப்படுவதுடன், அதற்கமைய ஒவ்வொரு வரைபடத்தையும் ச.கி.மீ. சதுரக் கோட்டுப் பங்குகளாக பிரித்து அந்தந்தக் கோட்டிற்குரிய உரிய அகலக்கோடு மற்றும் நெடுங்கோட்டின் அமைவின்படி ஆராய்வுப் பிரதேசங்கள் இனம் காணப்படுகிறது.

(ii) ஆகக் குறைந்தது 01 சதுரக் கிலோ மீற்றர் மற்றும் உச்சக்கட்டமாக 100 சதுரக் கிலோ மீற்றர் அளவிலான நிலம் கனிப்பொருட்களை ஆராய்வதற்காக அனுமதிக்கப்படும். (சட்டத்தின் 48 ஆம் பிரிவு மற்றும் கட்டளை 04)

*ஆராய்வு அனுமதிப்பத்திரங்கள் தேவைப்பாடத சந்தர்ப்பங்கள்*

(iii) கட்டிடப் பொருட்கள் எனக் குறிக்கப்படும் கனிப்பொருள் வகைகளுக்காக கனிப்பொருள் அகழ்வுக்கு முன் ஆராய்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது தேவைப்படமாட்டாது.

*தொழில்நுட்ப ரீதியிலான கனிப்பொருள் ஆராய்வு*

(iv) தொழில்நுட்பம்சார் கனிப்பொருட்களாக குறிக்கப்பட்டுள்ள கனிப்பொருள் வகைகளுள் திரிகைக்கல், சிப்பிஓடு, பெல்ஸ் பார், டொலமயிட், கெல்சயிட், காரீயம் ( மைக்கா), சுண்ணாம்புக்கல், கெயோலின், களி மற்றும் சிலிக்கா மணல் ஆகிய கனிப்பொருள் வகைக்காக ஆராய்வு அனுமதிப்பத்திரமின்றி தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் “இ” மற்றும் “ஈ” தொகுதியின் கீழ் மட்டும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கலாம்.

(v) தொழில்நுட்ப ரீதியலான அகழ்வுகள் எனக் குறிப்பிடும் மேற்போந்த (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிபொருட்களைப் போன்று ஏனைய அனைத்து தொழில்நுட்ப கனிப்பொருட்கள், பெறுமதி வாய்ந்த உலோகங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் வேறு கனிப்பொருள் தொகுதிகளுக்குரிய கனியங்களுக்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள முன்னராக ஆராய்வு அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.

*ஆராய்வு அனுமிப்பத்திரம் கோரும் முறை*

(vi) கட்டளை 4 இன் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கும் திறமுறை காட்டப்பட்டுள்ளதுடன் ஆராய்வு அனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும் போது அதில் குறிப்பிட்டுள்ள படிவம் 2.1 மற்றும் படிவம் 2.3 ஐ பயன்படுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2.2.2 அகழ்வு அனுமதிப்பத்திரங்கள்

*அகழ்வு அனுமதிப் பத்திரங்களை குறித்தல*

29. அகழ்வு என்பது யாதேனும் கனிப்பொருட்களை மதிப்பிடும் மற்றும் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டிற்காக மேற்பரப்பில் அல்லது மேற்றளத்தினுள் செய்யப்படும் அகழ்வாகும். அதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் அகழ்வு அனுமதிப்பத்திரமாகும். கனிப்பொருட்களை அகழ்வதற்காக பயன்படுத்தப்படும் திறமுறைகளையும் இயந்திர சாதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் மேலும் 3 தொகுதிகளாக வகைப்படுத்தப்படுகிறது.

*தேர்ச்சிப் பெற்ற அகழ்வுகள்*

(i) **தேர்ச்சிபெற்ற அகழ்வு அனுமதிப்பத்திரங்கள்**

கனிப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டிற்காக சவள்கள், குழிதோண்டும் கருவிகள், மண்கோலிகள், அலவாங்குகள், கம்பங்கயிறுகள் மற்றும் வாளிகள் போன்று கைகளினால் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மூலம் மனித உழைப்புகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அகழ்வுகள் தேர்ச்சிப் பெற்ற அகழ்வுகள் எனப் பொருள்படும். (கட்டளை 03) உற்பத்திக் கனவளவு அடங்கலாக மேலும் சில விடயங்களின் அடிப்படையில் தேர்ச்சிப் பெற்ற அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் மேலும் 02 தொகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றது.

*தேர்ச்சிபெற்ற அகழ்வு வகைகள்*

**தேர்ச்சிப் பெற்ற அகழ்வுகள் "அ" வகை (ஏஎம்எல் "ஏ")**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 210 கியுப் களுக்கு மேற்பாததும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 10 ஹெக்டயார்களுக்கு மேற்படாததும்.

**தேர்ச்சிப் பெற்ற அகழ்வுகள் "ஆ" வகை (ஏஎம்எல் "பி")**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 35 கியுப்களுக்கு மேற்படாததும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 10 ஹெக்டயார்களுக்கு மேற்படாததும்.

*தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வு வகைகள்*

(ii) **தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வு அனுமதிப்பத்திரங்கள்**

தொழில்நுட்ப அகழ்வுகள் என்பது பொறிசார் ரீதியில் இயங்கும் இயந்திர சாதனங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அகழ்வுகளைக் குறிக்கின்றது. பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் மற்றும் மாதாந்த உற்பத்திக் கனவனவு அடங்கலாக மேலும் சில விடயங்களின் அடிப்படையில் தொழில்நுட்ப அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் மேலும் 04 தொகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றது. (கட்டளை 05)

**தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "அ" வகை (ஐ.எம்எல் "ஏ")**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 2,000 கியுப் களுக்கு மேற்பட்டதும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 02 ஹெக்டயார்களுக்கு மேற்பட்டதும்.

**<u>தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "ஆ" வகை (ஐ.எம்எல் "பி")</u>**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 2,000 கியுப் களுக்கு மேற்படாததும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 10 ஹெக்டயார்களுக்கு மேற்படாததும்

**<u>தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "இ" வகை (ஐ.எம்எல் "சீ")</u>**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 1,000 கியுப் களுக்கு மேற்படாததும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 02 ஹெக்டயார்களுக்கு மேற்படாததும்

**தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "ஈ" வகை (ஐ.எம்எல் "டி")**

உற்பத்திக் கனவளவு மாதமொன்றுக்கு 500 கியுப் களுக்கு மேற்படாததும் அகழ்வு செய்யப்படும் பிரதேசம் 02 ஹெக்டயார்களுக்கு மேற்படாததும்

*பாதுகாப்பு ரீதியான கனிப்பொருள் அகழ்வுகள்*

**(iii) பாதுகாப்பு ரீதியான கனிப்பொருள் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள்**

பாதுகாப்பு ரீதியிலான கனிப்பொருள் அகழ்வு என்பது கதிர்வீச்சி மூலப்பொருட்கள் உள்ளடங்கிய கனிப்பொருட்கள் மற்றும் முருங்கைக்கல் அகழ்வாகும். பாதுகாப்புக் கனிப்பொருள் அகழ்வனுமதிப்பத்திரங்கள் வழங்க முன் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறவேண்டும்.அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக படிவம் 5ஐ பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் பணியகத்திற்கு முன்னளிக்க வேண்டும்.(கட்டளை 7(2))

அகழ்வனுமதிப்பத்திரங்கள் தொடர்பான கூடிய விபரங்கள் 2.5 இன் "அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயல்நெறியின்" கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 வியாபார அனுமதிப்பத்திரங்கள்

*வியாபார அனுமதிப்பத்திரங்களை அறிமுகப்படுத்தல்*

30. கனிப்பொருட்கள் வியாபாரம் என்பது அகழ்வுச் செயற்பாடின்றி அல்லது செல்லுபடியான அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் கீழ் அகழ்வு செய்யப்படும் கனிப்பொருட்களை கொள்வனவு செய்தல், குறித்த கனிப்பொருட்களை செயலாக்கம் செய்தல், களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் தேவையான வேளைகளில் கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி செய்தலாகும். அதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் ஆகும். மேற்கொள்ளப்படும் செயற்பாட்டின் பேரில் அனுமதிப் பத்திரங்கள் மீண்டும் 03 தொகுதிகளாக பிரிக்கப்படுகிறது: அதாவது

(i) வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் "அ" தொகுதி - ஏற்றுமதிக்காக கனிப்பொருட்கள் வியாபாரம்

(ii) வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் "ஆ" தொகுதி - உள்நாட்டு ரீதியில் கனிப்பொருட்களை செயலாக்கம் செய்தல், களஞ்சியப்படுத்தல் வியாபாரம் செய்தல்

(iii) வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் "இ" தொகுதி – மனித உழைப்பில் தயாரிக்கப்பட்ட செங்கல் மற்றும் சுண்ணாம்பு வியாபாரம்

வர்த்தக அனுமதிப்பத்திரங்களுக்காக படிவம் 4.1 இன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
(கட்டளை 6-1 அ)

### 2.2.4 பண்டசாலை அனுமதிப்பத்திரங்கள்

31. பண்டசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் கட்டளைகள் ஆக்கப்பட்டிராததால் இவ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது

### 2.2.5 ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள்

*ஏற்றிச்செல்லல் அனுமதிப்பத்திரங்களை அறிமுகப்படுத்தல்*

32. கனிப்பொருட்களை கொண்டு செல்லல் என்பது ஆராய்வுகள், அகழ்வுகள் மற்றும் வர்த்தக அனுமதிபத்திரம் பெறுநராலேயே கனிப்பொருட்களுடன் கூடிய ஒரு பொருளை அல்லது கனிப்பொருட்களை கொண்டு செல்லல் ஆவதுடன் அதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரமாகும். கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அகழ்வுகள் மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கனிப்பொருட்களுக்கும் அதில் அனுமதிக்கப்பட்டுள்ள கியுப் அளவிற்கும் மட்டும் வரையறுக்கப்படும். கனிப்பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் 4 வகைகளாக வகுக்கப்படுகின்றது.

*கொண்டு செல்லும் அனுமதிப்பத்திர வகை*

(i) கங்கைகள் / கடல் சார்ந்த மற்றும் மேட்டு நில மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம்
(ii) மணல் தவிர்ந்த ஏனைய கனிப்பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம்
(iii) கட்டிடப் பொருட்கள் வியாபார நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம்
(iv) மாவட்டச் செயலாளர்கள் / பிரதிச் செயலாளர்கள் / கிராம உத்தியோகத்தர்கள் / அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரங்கள்

*கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறும் முறை*

33. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 32 (i)-(iii) கொண்டு செல்லும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக விண்ணப்பதார் ஒருவர் படிவம் 7 ஐ பூர்த்தி செய்து ஆராய்வு அகழ்வு அல்லது வர்த்தக அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன் பணியகத்தின் மாவட்ட / பிரதேச அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் பிரிவு 32(iv) அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக படிவம் 4.1 அல்லது 4.3 ஐ பூர்த்தி செய்து மாவட்டச் செயலாளர் / பிரதேசச் செயலாளர் / கிராம உத்தியோகத்தர் / அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரப் படிவம் 4.2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(மேலதிக விபரங்கள் அத்தியாயம் 5 இல் காட்டப்பட்டுள்ளது)

### 2.2.6 ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள்

*ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களை அறிமுகம் செய்தல்*

34. ஏற்றுமதி என்பது தொழில்நுட்ப அகழ்வுகள், “அ” மற்றும் “ஆ” தொகுதியின் அகழ்வு அனுமதிப்பத்திரம் பெறுநர்களினாலும் “அ” தொகுதியின் வர்த்தக அனுமதிப்பத்திரம் பெறுநர்களினாலும் கனிப்பொருடகள் ஏற்றுமதி செய்தலாகும். அதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் ஏற்றுமதி அனுமதிப்பத்திரமாகும்.

ஏற்றுமதிக்காக அனுமதியளிக்கப்படும் கனிப்பொருள் வகை

35. ஏற்றுமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்படுவது பின்வரும் கனிப்பொருட்கள் வகைகளுக்காக மட்டுமாகும் (கட்டளை 33(ஆ) )

(i) காரீயம்
(ii) தலாத்து காரீயம் (மைக்கா)
(iii) கிறனைட்
(iv) திரிகைக்கல்
(v) இல்மனைட்
(vi) ரூடைல்
(v) சர்கோண

*பெறுமதிசேர் கனிப்பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவித்தல்*

36. பெறுமதிசேர் கனிப்பொருள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக பணியகத்தினால் ஏற்றுமதியாளர்கள் கனிப்பொருட்கள் முதலீட்டு உடன்படிக்கைகளின்பால் ஈடுபடுத்தப்படுவர் (கட்டளை 10)

37. கிறனைட் மற்றும் திரிகைக்கல் ஆகிய கனிப்பொருட்களை பெறுமதி சேர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதற்காக அனுமதிபத்திரம் வழங்கப்படுவதுடன், திரிகைக்கல் கனியத்தை 150um க்குக் குறைந்த தூளாகவும் 0.10mm அளவிலான திரிகைக்கல் துண்டுகளாகவும் மட்டும் ஏற்றுமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

### 2.3 அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம்

*அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம்*

38. பணியகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம் பின்வருமாறு -

| | | |
|---|---|---|
| 01. ஆராய்வு அனுதிப்பத்திரங்கள் | | ஆராய்வு அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் 02 வருடங்களாகும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின்வண்ணம் 10 வருடங்கள்வரை அச்செல்லுபடியாகும் கலாம் பணியகத்தால் தீர்மானிக்கப்படலாம். |
| 02. அகழ்வு அனுதிப்பத்திரங்கள் | | |
| (i) தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் “அ” தொகுதி | | 03 வருடங்கள் ஆகும் இருக்கின்ற இருப்பு வளங்கள், அதன் வர்த்தக உற்பத்திகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை கருத்திற் கொண்டு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் பணியகத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (ii) தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் “ஆ” தொகுதி | | 03 வருடங்கள் |

| | | |
|---|---|---|
| (iii) தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "இ" தொகுதி | | 03 வருடங்கள் |
| (iv) தொழில்நுட்ப ரீதியிலான அகழ்வுகள் "ஈ" தொகுதி | | 03 வருடங்கள் |
| (i) தேர்ச்சிப் பெற்ற அகழ்வுகள் "அ" வகை | | 03 வருடங்கள் |
| (ii) தேர்ச்சிபெற்ற அகழ்வுகள் "ஆ" வகை | | 03 வருடங்கள் |
| 03. வியாபார அனுமதிப்பத்திரங்கள் | | 01 வருடங்கள் |
| 04. ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் | | 01 வருடங்கள் |
| 05. ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் | | 01 வருடங்கள் |

*ஓர் அனுமதிப் பத்திரத்திற்கான தடைநீக்கங்களில் செல்லுபடி காலம்*

39. அகழ்வு அனுமதிப்பத்திரத்துக்குரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சகல தடைநீக்கங்களின் செல்லுபடி காலஎல்லை ஆரம்பிக்கப்பட வேண்டியது பணியகத்தினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் ஆரம்பத் திகதியிலிருந்தாகும்.

40. கனிப்பொருட்கள் ஆராய்வு /கொண்டு செல்லல்/வியாபார மற்றும் வெடிபொருட்கள் என்பவற்றின் அனுமதிப்பத்திரங்கள் தவிர, அகழ்வு அனுமதிப்பத்திரம் மற்றும் அதற்குரிய எல்லா நியதிச்சட்ட நிறுவனங்களாலும் வழங்கப்படும் தடைநீக்கங்களும் 3 வருடத்துக்குச் செல்லுபடியாகும்வண்ணம் வழங்கப்படல் வேண்டும். எனினும் சேவைபெறுநரொருவர் கோரிக்கை விடுக்கும்பட்சத்தில் அந்தத் தடைநீக்கங்களை ஒருவருடத்துக்காகவும் வழங்கமுடியும்.

## 2.4 அனுமதிப் பத்திர விண்ணப்பதாரர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

*கனிப்பொருள் அனுமதிப்பத்திரம் கோருவதற்காக விண்ணப்பகாரர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்*

41. கனிப்பொருள் ஆராய்வு, அகழ்வு, வியாபாரம், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் கோர எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரர் ஒருவர் பின்வரும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும் ( சட்டத்தின் 29 ஆம் பிரிவு)

(i) 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
(ii) அரச உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஏதேனும் மாகாண சபையில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில் சேவை புரிபவர் அல்லாதிருத்தல்
(iii) அனுமதிப் பத்திரம் கோரப்படுவது யாதேனும் அகழ்வுச் செயற்பாட்டிற்காக? அப்படியாயின் பணியகத்தின்

அபிப்பிராயத்தின்படி அப்பணிகளை புரிவதற்குத் தேவையான நிதிசார் மற்றும் தொழில்நுட்பம்சார் தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரராக இருத்தல்

(iv) இலங்கையில் வலுவிலுள்ள யாதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவர் என உறுதிப்படுத்தப்பட்டிராத ஒருவராக இருத்தல்

(v) கம்பனி ரீதியில் விண்ணப்பிப்பதாயின் குறித்த கம்பனியானது இலங்கையில் வியாபார அலுவல்களுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதொரு கம்பனியாக இருத்தல்

(vi) விண்ணப்பதாரர் பாரளுமன்றத்திற்கு மாகாணசபைக்கு அல்லது பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்டதொரு உறுப்பினர் அல்லாதிருத்தல்

## 2.5 அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்நெறி

### 2.5.1 அகழ்வு அனுமதிப்பத்திரங்களுக்காக முன்னளிக்க வேண்டிய ஆவணங்கள்

*அகழ்வு அனுமதிப்பத்திர விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்*

42. தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவர் அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை கோருவதற்கான 1(அ) படிவமும் மண், சரளைக்கல் மற்றும் மணல் அகழ்வுக்காக 1(ஆ) படிவமும்

(ii) அகழ்வு செய்யப்படும் காணியின் உறுதியின் பிரதியும் காணிக்குள் பிரவேசிக்கும் வீதி விபரங்களும்

(iii) அகழ்வு செய்யப்படும் காணி அடையாளமிடப்பட்ட வரைபடத்தின் பிரதி

(iv) விண்ணப்பதாரர் அகழ்வு செய்ய எதிர்பார்க்கப்படும் காணியின் உரிமையாளர் அல்லாதிருத்தல்

(அ) குத்தகை ஒப்பந்தம் அல்லது வேறு சட்டரீதியான ஆவணம், அல்லது

(ஆ) காணியின் உரித்து ஒரு நியதிச்சட்ட அரச நிறுவனத்தின் பொறுப்பில் இருக்கும்பட்சத்தில் படிவம் 2 இன்படி வழங்கப்பட்ட தடைநீக்கம்

(v) ஆளொருவர் என்ற ரீதியில் விண்ணப்பிப்பதாயின் தேசிய அடையாள அட்டையின் பிரதி

(vi) கம்பனி என்ற ரீதியில் விண்ணப்பிப்பதாயின் கம்பனி பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் பிரதி (அரச நிறுவனங்கள் தொடர்பில் ஏற்புடையாகாது).

(vii) தொழில்நுட்ப அகழ்வுகள் “அ” மற்றும் “ஆ” அனுமதிப்பத்திரங்களுக்காக அகழ்வுத் திட்டம் மற்றும் சீர்திருத்த திட்டம் உள்ளடங்கிய பொருளாதார சுயதரவு அறிக்கை

மேற்படி ஆவணங்களை மூலப்பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் மூலப்பிரதி இல்லாதவிடத்து சட்டத்தரணியொருவர் / சமாதான நீதவான் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) தொழில்நுட்ப மற்றும் தேர்ச்சி பெற்ற அகழ்வுக்காக

சந்தர்ப்பத்திற்கேற்றவாறு புனரமைப்பு முறியொன்று பணியகத்தினால் கோரப்படலாம். (அரச நிறுவனங்கள் தொடர்பில் ஏற்புடையதாகாது)

*அகழ்வு அனுமதிப்பத்திரங்களை பொறுப்பேற்றல்*

43. பணியகத்தினால் அல்லது அதன் அதிகாரம் பெற்ற நிறுவனங்களினால் மேற்போந்த 42 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்களின் வசதிக்காக “ஒற்றை முறையிலான கட்டண முறையின்”படி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும்போது தடைநீக்கங்களை பெறவேண்டிய நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களையும் பணியகம் அறவிட்டுக் கொள்ள வேண்டிய கட்டணங்களையும் ஒன்று சேர்த்து அறவிட வேண்டும். (கட்டணங்கள் தொடர்பான மேலதிக விபரங்களுக்காக 06 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்)

44. கட்டணங்களை அறிவிட்ட பின் அக் கொடுப்பனவுகளுக்குரிய பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொண்டதாகவும் அறிவித்து பணியகத்தினால் விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்படும். அதன்பின்னர் பணியகத்தின் உத்தியேகபூர்வ அனுமதிப்பத்திரப் பிரிவில் பதிவுசெய்தல் வேண்டும்.

### 2.5.2 அகழ்வு அனுமதிப் பத்திரங்களுக்காக விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டதன் பின்னரான அலுவல்கள்

*விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டதன் பின்னரான அலுவல்கள்*

45. பணியகத்தினால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொண்டதன் பின் விண்ணப்பம் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை தாமதிக்காது எடுக்க வேண்டும்.

(i) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் கனிப்பொருட்கள் உரிமைகள் பற்றிய பதிவாளர்களினால் செய்யப்பட வேண்டியதுடன் புவியியல் ரீதியான தகவல்களின் தரவுகளின் அடிப்படையில் முன்னுரிமை வகுப்பீட்டு தகவல்களை கற்றாராய்தல்.

(ii) பூர்த்தி செய்யப்பட்ட பொது விண்ணபத்தில் உள்ளடங்கியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேட்டின்படி P1A, P1B,P2,P3 ஆகிய வலயங்களுள் உள்ளடங்குகின்றனா என்பதை இனமறிதல்

(iii) பணியகத்தின் பதிவாளர்களினால் P1-A,P1-B,P2,P3 தகவல்களை பொதுப்படிவத்தின் அலுவலக உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ளடக்குதல்.

(iv) ஆனைத்துக் கடித ஆவணங்கள் மற்றும் கட்டணங்களுடன் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களை அதே தினத்தில் தடைநீக்கங்களை பெற்றுக்கொள்வதற்காக இலத்திரனியல் முறைகளின் ஊடாகவோ அல்லது தொடர்புடைய கடித ஆவணங்களோடு தொடர்புடைய நியதிச்சட்ட அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்.

### 2.5.3 பணியகத்தின் உத்தியோகபூர்வ அனுமதிப்பத்திரக் கூறின் வேலைப்பளு

46. பணியகத்தின் உத்தியோகபூர்வ அனுமதிப்பத்திரக் கூறினால் முன்னுரிமை இடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் போது உரிய தகவல்கள் அடங்கிய புவியியல் விஞ்ஞான தரவுத் தொகுதியையும் P1P2P3 வகுப்பீட்டு ஆவணத்தையும் பேணல் வேண்டும்.

47. அனைத்து விண்ணப்பங்கள் தொடர்பாக விண்ணப்பம் கிடைத்த திகதி, இடம் பற்றிய விபரங்கள், விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, அனுமதிப்பத்திர வகை, கியுப் அளவுகள், தடைநீக்கங்களை கோரிய திகதி / கிடைத்த திகதி / அனுமதிப்பத்திரங்கள் / தீர்மானங்கள் வெளியிட்ட திகதி மற்றும் செலுத்தி கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய “அனுமதிப்பத்திர விபரப் பதிவேடொன்று (பணியகத்தினால்) பேணப்பட வேண்டும்.

*பணியகத்தினது உத்தியோகபூர்வ அனுமதிப்பத்திரக் கூறின் வேலைப்பளு*

48. ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் எதிர்வரும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுமதிப்பததிர விபரப் பதிவேடு பற்றி சுற்றாடல் அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். மேலும் அப்பதிவேட்டின் பிரித்தெடுப்பிதழொன்றை காணிப்பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

49. அரசுரிமை அறிவிடல் மற்றும் அனைத்து அனுமதிப்பத்திரம் பெறுநர்களும் பணியகத்தினால் தற்போதைக்கு அறவிடப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்க அமைவாக கனிப்பொருட்களின் உரித்திற்காக அறவிட வேண்டிய அரசுரிமை கட்டணங்களை பணியகத்திற்கு அறிவிட்டுக் கொள்ள வேண்டும்.

எத்தகையதொரு விண்ணப்பக்காரர் தரப்பின் சார்பில் அனுமதி / பரிந்துரைகள் / மதிப்பீடுகள் அல்லது அத்தகைய ஆவணங்களை வரவழைக்கும் போது விண்ணப்பங்களை வழங்கும் அதே சந்தர்ப்பத்திலேயே அதற்குத் தேவையான விருப்பத்தை / உடன்பாட்டை குறித்த தரப்பிடமிருந்து பெறுவதற்கும் அதற்காக தேவையான கட்டணங்களை செலுத்துவதற்கான இணக்கத்தை பெறுவதற்கும் தேவைப்படின் முற்பணமொன்றை பெறுவதற்கும் பணியகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

50. பணியகத்தில் அமைக்கப்பட்ட பாவனையாளர் சேவைகள் கூறினால் / உத்தியோகத்தரினால் இணைந்த தடைநீக்கங்களை அல்லது தொடர்புடைய நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் தடைநீக்கங்களை பணியகத்திற்கு மிக விரைவாக பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தடைநீக்கங்களை வழங்கும் தொடர்புடைய அரசின் நியதிச்சட்ட நிறுவனங்களும் தமது தடைநீக்கங்களை மிகவிரைவாக இலத்திரனியல் முறையினூடாக / மின்னஞ்சல் மூலமாக பணியத்திற்கு வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

51. பணியகமானது அரச காணிகளை முகாமை செய்கின்ற நிறுவனங்களில் கனிப்பொருட்களை அகற்றுவதற்காக கியுப் அளவின்படி கணிப்பீடு செய்து அறவிடும் அரச கட்டணங்கள் தொடர்பாக தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

(1) அகழ்வு செய்யப்படும் இடங்களை 06 மாதங்களுக்கு ஒரு முறை சமசீர்கோட்டு வரைபடமொன்றின்படி கணித்து காணி முகாமைத்துவ உரித்துள்ள நிறுவனத்திற்கு / அகழ்வு செய்பவருக்கு / வெடிப்பொருட்கள் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தல்

**2.5.4 அகழ்வு விண்ணப்பங்கள் தொடர்பான வகுப்பீடும் தடைநீக்கத்திற்கான அழைப்பும்**

*அகழ்வு விண்ணப்பங்களை வகுப்பீடு செய்தலும் தடைநீக்கங்களை வரவழைத்தலும்*

52. பணியகமானது "முன்னுரிமை வகுப்பீட்டுப் பதிவேட்டினை" பயன்படுத்தி அனுமதிப்பத்திர செயல்நெறியின் போது வேண்டிய தடைநீக்கங்களை வரவழைக்க முன் அதற்காக எந்நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனத்திலிருந்து தடைநீக்கங்கள் வரவழைக்க வேண்டும் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

53. P1-A இடங்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 05 நாட்களுக்குள் பணியகத்தினால் களப்பரீட்சையைச் செய்தல்வேண்டும்.

54. P1-B மற்றும் P2 இன் கீழ்வரும் இடங்களுக்காக, விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 05 நாட்களுக்குள் பணியகத்தினால் களப்பரீட்சையை செய்ய வேண்டியதோடு, ஆரம்ப சுற்றாடல் ஆய்வுகள்/சுற்றாடல் பாதிப்பு மதிப்பீடுகள்/ கற்றாராய்தலுக்கு உட்படாத உரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் தடைநீக்கங்களை 21 நாட்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் (மேலதிக விபரங்களுக்காக 83 முதல் 108 வரை பார்க்கவும்).

55. P3 அல்லது தற்போதைக்கு முன்னுரிமை வகைப்படுத்தல் அட்டவணையில் இல்லாத இடங்களுக்காக, விண்ணப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் பணியகத்தினால் களப்பரீட்சையை நடத்தவேண்டியதோடு ஆரம்ப சுற்றாடல் ஆய்வுகள் / சுற்றாடல் பாதிப்பு மதிப்பீடுகள் / தாக்கங்களின் மதிப்பீடுகள் கற்றாராய்தலுக்கு உட்படாத சந்தர்ப்பங்களில், உரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் தடைநீக்கங்களை 21 நாட்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் (மேலதிக விபரங்களுக்காக 83 முதல் 108 வரை பார்க்கவும்)

56. பணியகத்தினால் இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும் தடைநீக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய நியதிச்சட்ட அரச நிறுவனங்களையும் களப்பரீட்சையில் பங்குபெறச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

57. அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாட்டின்போது தேவையான வெடி ஆய்வுகள், நிலத்தடி நீர் வளங்களின் உணர்திறன், மண்சரிவு ஆபத்து, மதிப்பீட்டு அறிக்கைகள், திட்டத் தீர்வு அறிக்கைகள், தொல்பொருள் பரிந்துரை, ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு, கற்றாராய்தல் மற்றும் சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு மற்றும் ஏனைய தடைநீக்கங்களின் தேவைப்பாடு, முழுதாக "P1P2P3 வகைப்படுத்தல் அட்டவணை" யினுள் இற்றைப்படும் வரையில் அத்தடைநீக்கத்தை வழங்கும் நியதிச்சட்ட அரச

நிறுவனங்களினால் அத்தியாயம் 04 இன் 83 முதல் 108 வரையிலான அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

*அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குதல்*

58. P1-A இடங்களுக்காக விண்ணப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி முதல் 07 தினங்களுக்குள்ளும், P1-B இடங்களுக்கு 14 தினங்களுக்குள்ளும், P2 இடங்களுக்கு 21 தினங்களுக்குள்ளும், P3 இடங்களுக்கு 30 தினங்களுக்குள்ளும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குப் பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

59. அடிப்படைச் சுற்றாடல் கற்றாராய்வு தேவைப்படும்போது, விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 1½ மாதம் முடிவடைவதற்குமுன்னரும், தாக்க மதிப்பீடு தேவைப்படும்போது **"4.2 அடிப்படைச் சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீடு"** இல் குறிப்பிடப்பட்டுள்ள காலச்சட்டகத்தினுள் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்க பணியகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

60. அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இணையாக,

(i) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்
(ii) வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திரம்
(iii) வர்த்தக, கைத்தொழில் அல்லது வியாபார அனுமதிப்பத்திரம்
(iv) காணி குத்தகைப் பத்திரம்

வழங்குவதற்காக பணியகத்தினால் சுற்றாடல் அதிகாரச் சபை, உரிய வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளர், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் காணியை முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை உடனடியாக அனுப்பிவைத்தல் வேண்டும். அதேபோன்று தடைநீக்கம் வழங்கிய சகல நியதிச்சட்ட நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் குறித்த விண்ணப்பப் பத்திரம் பணியகத்தினுள் பரீட்சித்துப் பார்க்கப்படும் ஏதேனும் சந்தர்ப்பமொன்றின்போது, அதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கான இயலுமை உள்ளதெனத்தென்படும்போது, முன் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கு முன்னேற்றக் கடிதமொன்றை அனுப்புவதற்குப் பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

*அகழ்வு விண்ணப்பபத்திரங்கள் நிராகரிக்கப்படுதல்*

61. மேலதிக தடைநீக்கங்கள் / வெடித்தல்கள் தொடர்பான ஆராய்வுகள் பெற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 தினங்களின் பின்பும், சுற்றாடல் தாக்கம் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காலசட்டகம் கடந்த பின்பும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் அங்கீகரிக்கப்படவில்லையெனில் அது தொடர்பாக மேற்போந்த காலம்கடந்து 03 தினங்களுக்குள் காரணங்களுடன் விண்ணப்பதாரருக்குப் பதிவுத்தபாலில் மற்றும் மின்னஞ்சல் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் (சட்டத்தின் 35 ஆம் பிரிவு).

62. அதேபோன்று வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றை இரத்துச்

செய்யும் அதிகாரம் பணியகத்திற்கு உள்ளதோடு, விண்ணப்பப் பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்காகப் பணியகத்தினால் எடுக்கப்படும் தீர்மானத்தைக் காரணங்களுடன் விண்ணப்பதாரர் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றவருக்குப் பதிவுத்தபால் மூலம் அறிவித்தல் வேண்டும் (சட்டத்தில் 38(1) ஆம் உறுப்புரை).

63. விண்ணப்பப்பத்திரத்தை நிராகரித்ததன் பின்பு விண்ணப்பப் பத்திரத்தோடு செலுத்தப்பட்ட அனுமதிபத்திரத்திற்கான கட்டணத்தை விண்ணப்பதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்

### 2.5.5. விண்ணப்பங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தலும் அதற்கு எதிரான மேன்முறையீடுகளும்

*விண்ணப்பப்பத்திரங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு எதிராக மேன்முறையீடு செய்தல்*

64. விண்ணப்பப்பத்திரத்தை அல்லது அனுமதிப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு எதிராக விண்ணப்பதாரருக்கு அல்லது அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு இரத்துச்செய்தல் அல்லது நிராகரித்தல் தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 தினங்களுக்குள் சுற்றாடல் விடயப்பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யமுடியும்.

(i) செயலாளரினால் நடத்தப்படும் மேன்முறையீட்டு விசாரணையொன்றின் பின்பு செயலாளரினால் வழங்கப்படும் பணிப்புரையை பணியகம் செயற்படுத்துதல் வேண்டும்

(ii) விண்ணப்பப்பத்திரத்தை நிராகரித்ததன் பின்பு விண்ணப்பப்பத்திரத்தோடு செலுத்தப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விண்ணப்பதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்

*சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம், வெடி பொருட்கள் அனுமதிப்பத்திரம், உள்ளூராட்சி நிறுவன வர்த்தக, கைத்தொழில் அல்லது வணிக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்*

65. அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி முதல் 14 தினங்களுக்குள்ளாக வழங்கப்பட்டுள்ள அகழ்வு அனுமதிப்பத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு,

(i) சுற்றாடல் அதிகாரசபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தையும்

(ii) வெடி பொருட்கள் கட்டுப்பாட்டாளரினால் வெடிபொருட்கள் அனுமதிபத்திரத்தையும்

(iii) உள்ளூராட்சி நிறுவனத்தினால் வர்த்தக, கைத்தொழில் அல்லது வியாபார அனுமதிப் பத்திரத்தையும் வழங்குதல் வேண்டும்

இந்நிறுவனங்கள் தமது அனுமதிப்பத்திரங்களைச் சுதந்திரமாக வழங்குதல் வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்களினால் வர்த்தக, கைத்தொழில் அல்லது வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது அகழ்வு அனுமதிப்பத்திரத்தைத் தவிர வேறு எந்தவொரு தடைநீக்கத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடாது.

*வெடி பொருட்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்பு பணிப்பொறுப்பு*

66. வெடிபொருட்கள் கட்டுப்பாட்டாளரினால் வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரம் வழங்கும் சந்தர்ப்பத்திலேயே அதன் பிரதியொன்றைப் பின்வரும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தல்

வேண்டும்.

(i) பணியகம்
(ii) காணிகளை முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனங்கள்
(iii) சுற்றாடல் அதிகாரசபை
(iv) பொலிஸ் நிலையம்

### 2.5.6 அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்

67. காணி உரிமையாளரின் விருப்பம் இல்லாது ஏதேனும் காணியொன்றில் கனிம அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் பணியகத்தினால் வழங்கப்படுதல் ஆகாது. (சட்டத்தின் 51ஆம் பிரிவு)

*அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரத்தை மட்டுப்படுத்தல்*

68. பின்வரும் நிலங்களை / வலயங்களை முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனத்தின் பரிந்துரைகள் இல்லாமல் பணியகத்தினால் அந் நிலங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது. (சட்டத்தின் 30 ஆம் உறுப்புரை)

(i) வனப் பாதுகாப்பு நிலங்கள்
(ii) வனச்சீவராசிகள் வலயங்கள்
(iii) கரையோர வலயங்கள்
(iv) மகாவெலி அபிவிருத்திக் கருத்திட்ட அதிகாரப் பிரதேசம்
(v) நகர அபிவிருத்தி வலயங்கள்
(vi) அரச காணியொன்றில் அமைந்துள்ள நினைவுச் சின்னமொன்றுக்கு அல்லது ஏதேனும் பாதுகாப்பு நினைவுச் சின்னம் ஒன்றுக்கு அல்லது தொல்பொருள் பாதுகாப்புப் பிரதேசமொன்றாகப் பிரகடனபடுத்தப்படும் பிரதேசம் (சட்டத்தின் 31 ஆம் உறுப்புரை)

69. அதன்வண்ணம், கனிம அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் கோரும் சந்தர்ப்பத்தில் காணி உரிமையுள்ள நிறுவனம் / நபரினால் அக் காணிகளைப் பயன்படுத்தல் தொடர்பான இணக்கத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும் (இது தொடர்பான மேலதிக விபரங்கள் அத்தியாயம் 03 இல் காட்டப்பட்டுள்ளது).

### 2.6 அரசின் முன்னுரிமை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படும் கனிம அகழ்வுகள் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கும் செயல்நெறி

*அரச முன்னுரிமை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அனுமதிபத்திரம் வழங்கும் செயற்பாடுகள்*

70. அரச முன்னுரிமை அபிவிருத்திக் கருத்திட்டங்கலாக அறிமுகப்படுத்தப்படும், வருடாந்த வரவுசெலவு அறிக்கையில் குறிப்பிடப்படும் அல்லது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது தேசியத் திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களினால் பரிந்துரை செய்யப்படும் கருத்திட்டமொன்றுக்காக அக்கருத்திட்ட முன்மொழிவாளர் அல்லது நடைமுறைப்படுத்துகின்ற அரச நிறுவனமொன்றினால் அனுமதிப்பத்திரமொன்று கோரும் சந்தர்ப்பத்தில் பணியகத்தினால் மற்றும் உரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடு பின்பற்றப்படுதல் வேண்டும்.

(i) அரசின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்காக மூலப்பொருட்கள் அகழ்வின்போது, களஞ்சியப்படுத்தும்போது, ஏற்றிச்செல்லும் போது மற்றும் விற்பனையின்போது அக்கருத்திட்ட முன்மொழிவாளர் அல்லது செயற்படுத்தும் அரச நிறுவனம் அனுமதிப்பத்திர உரிமையாளராகக் கருதப்படலாம்.

அரச காணிகள் பயன்பாட்டின் இணக்கப்பாட்டை 03தினங்களுக்குள் வழங்குதல்

(ii) அரச காணிப் பயன்பாட்டு இணக்கப்பாட்டின்போது அனுமதிப்பத்திரம் எதிர்பார்க்கப்படும் அரச நிறுவனத்தின் கோரிக்கை கிடைக்கப்பெற்று 03 தினங்களுக்குள் அக் காணியை அகழ்வதற்கான இணக்கத்தை மாதிரிப்படிவம் 02 இன் மூலம் பணியகத்திற்கும் பிரதியொன்றுடன் விண்ணப்பதார அரச நிறுவனத்திற்கு காணி முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனத்தினால் வழங்கப்பட வேண்டும். இவ் இணக்கப்பாட்டை வழங்கும்போது உரிய நியதிச்சட்ட அரச நிறுவனத்தினால் 72 முதல் 82 வரையான அறிவுறுத்தல்களையும் (காலம் தொடர்பான அறிவுறுத்தல்கள் தவிர்ந்த) பின்பற்ற வேண்டும்.

(அ) ஏதேனும் ஒரு நியதிச்சட்ட அரச நிறுவனமொன்றினால் இச் செயற்பாட்டு விதிக்கோவையின் விடயஎல்லையின்கீழ் புவியியல் வளங்கள்/கனிமஅகழ்வு தொடர்பான செயற்பாடு ஒன்றுக்காகக் காணிக் கையளிப்பு கோருவதாயின் அது தொடர்பான தீர்மானத்தை கோரிக்கை கிடைக்கப்பெற்று 30 தினங்களுக்குள் வழங்குவதற்கும்,காணிக் கையளிப்புக்கு விருப்பம் தெரிவித்து 05 தினங்களுக்குள் காணியின் ஆட்சியை கையளிப்பதற்கும் அரச காணிகள் முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனத்தினால் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(iii) அனுமதிப்பத்திரம் கோரும் நிறுவனத்தினால் 42 இல் கூறப்படும் ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பப் பத்திரமொன்று பணியகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

(iv) ஆரம்பச் சுற்றாடல் ஆய்வொன்றுக்கு அல்லது தாக்கங்கள் கற்றாராய்தலுக்கு உட்படுமேயானால் அன்றி, இவ்வாறான கோரிக்கைக்கு உரிய விண்ணப்பப்பத்திரம் தொடர்பாக தமது தீர்மானத்தை பணியகத்தினால் 21 தினங்களுக்குள் வழங்க வேண்டும்.

(v) இச் செயற்பாட்டின்போது, பணியகம் மற்றும் உரிய நியதிச்சட்ட அரச நிறுவனங்களால் அதிக முன்னுரிமையை வழங்கி குறைந்த காலகட்டத்தினுள் அனுமதிப்பத்திரத் தடைநீக்கங்கள் வழங்குவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

(vi) இச் செயற்பாடு எதிர்பார்க்கப்படும் விதத்தில் நடைபெறுவதில்லை என அவதானிக்கப்படும் பட்சத்தில் கோரிக்கையாளரான அரச நிறுவனத்தினால் அது தொடர்பாகச் சுற்றாடல் அமைச்சின் தேசியக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

**2.7 குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்து பாவனையாளர்களுக்கு வசதியான விலக்கு மணல் வழங்கல் (விசேட மணல் அகழ்வு வலயங்கள் / மணல் நிலையங்கள்**

*குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத்தரத்தை உயர்துவதற்காக நுகர்வோருக்கு இலகுவான விலைக்கு மணலை வழங்குதல்*

71. அதிக அளவிலான மணல் ஒதுக்கங்கள் உள்ள இடங்களை அண்டியதாகச் சுற்றாடல் அமைச்சினால் மணல் நிலையங்கள் தாபித்தல் வேண்டும்

(i) திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, புத்தளம், குருணாகல் ஆகிய மாவட்டங்களில் இனங்காணப்பட்ட விசேட 07 மணல் அகழ்வு வலயங்களை அடிப்படையாகக்கொண்டு முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றாக முதலாவதாக ஆரப்பித்தல் வேண்டும். முன்னோடிக் கருத்திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் நாடுபூராகவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) கருத்திட்டத்தை ஜி.எஸ்.எம்.பீ.டெக்னிகல் சர்விஸ் தனியார் கம்பனி அல்லது நியதிச்சட்ட அரச நிறுவனமொன்றின் மூலம் நடைமுறைப்படுத்த இயலும்.

(iii) மணல் நிலையங்களின் மூலம் அவ் அகழ்வு வலயங்களை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறுநர்கள்/சமுர்த்தி பெறுநர்களுக்குச் சுயதொழிலொன்றாக மணல் அகழ்வு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியதோடு நுகர்வோருக்கு இலகுவான விலைக்கு மணல் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விசேட மணல் வலயங்களுக்குரிய பிரதேச செயலாளர்களின் பங்குபற்றுதலுடனான குழுவொன்றின்மூலம் இவ் மணல் நிலையங்கள் நிர்வாகிக்கப்படுதல் வேண்டும். பணியகத்தின் உறுப்பினர் ஒருவர் குழுவின் செயலாளராக செயற்படுதல் வேண்டும். இக் குழுவை நியமித்தல், உரிய மாவட்டச் செயலாளரின் பரிந்துரையின்கீழ் சுற்றாடல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(v) அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் வண்ணம், மணல் நிலையங்கள் செயற்படவேண்டிய முறைமைபற்றி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருமைப்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

## 03. மூன்றாம் அத்தியாயம்

**அரச காணி உரிமை / முகாமையை கொண்டுள்ள நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களின் அக்காணிகளின் பயன்பாட்டிற்காக இணக்கத்தை தெரிவித்தல்**

### 3.1 அரச காணிகள்

*அரச காணிகளைப் பயன்படுத்தல் ஒருமைப்பாட்டை வழங்குதல்*

72. அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் மற்றும் சனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கமைய காணி உரிமையுள்ள சகல நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் தமது தடைநீக்கத்தை வழங்கும்போது பின்வரும் விதத்தில் செயற்படுதல் வேண்டும் (...... ஆம் இலக்க மற்றும் ....................திகதிய மற்றும் ............ இலக்க மற்றும் திகதிய சனாதிபதியின் செயலாளரின் சுற்றறிக்கை)

73. உத்தேசிக்கப்பட்டுள்ள அகழ்வு நிலத்தின் உரிமை அரசாங்கத்திற்கு உரித்தாகும் சந்தர்ப்பமொன்றின்போது மற்றும் அக் காணி பிரதேச செயலாளரின் நிர்வாகத்தின்கீழ் உள்ள சந்தர்ப்பமொன்றின்போது, பிரதேச செயலாளரினாலும், அக் காணி வேறொரு நியதிச்சட்ட நிறுவனமமொன்றின் முகாமைத்துவத்தின்கீழ் உள்ள சந்தர்ப்பத்தின்போது அந்நிறுவனத்தின் மாவட்ட/பிரதேச உத்தியோகத்தர்களினாலும் காணி அமைந்துள்ள இடத்தில் அகழ்வு பணிகள் செயவ்தற்குத் தேவையான காணி பயன்படுத்தலுக்கான இணக்கத்தை வழங்கவேண்டும்.

*அரச காணிகள் பயன்படுத்தல் கட்டணம்*

(i) இதன்போது மாகாணக் காணி ஆணையாளர்களின் இணக்கப்பாட்டைப் பெறுவது அவசியமற்றதாகும். பிரதேச செயலாளர் அல்லது உரிய நியதிச்சட்ட நிறுவனங்களின் மாவட்ட /பிரதேச அதிகாரிகளினால் இவ்விடயத்துக்கான தமது பரிந்துரையைச் சுயாதீனமானமுறையில் வழங்கவேண்டியதோடு, ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு தமது பரிந்துரையை வழங்குவதைத் தாமதம் செய்வது தேவையற்றதாகும்.

(ii) பணியகத்தினால் அரச பங்கு உட்பட வேறு கட்டணங்களை அறவிட்டு அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்கியதன் பின்பு அவ் அகழ்வுப் பொருட்களைப் பாவித்து ஏதேனும் வகையில் களஞ்சியப்படுத்துதல், விற்பனைசெய்தல் அல்லது மேம்பாட்டுக் கைத்தொழிலொன்றுக்காக, அகழ்வு இடத்திற்குப் புறம்பாக அரச காணி பயன்படுத்தப்படுமாயின் அப்பயன்படுத்தலுக்காக வரி அல்லது கட்டணங்களை அறவிடுவதற்குப் பிரதேச செயலாளர் அல்லது குறித்த நிறுவனம் உரிய செயற்பாட்டு விதிமுறைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கலாம்.

*நியதிச்சட்ட அரச நிறுவனங்களுக்குரிய காணிகள்*

74. கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, வனப் பாதுகாப்பு மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்தின்கீழ் நிர்வாகிக்கப்படும் அரச காணிகள்/குளங்கள்/வயல்களில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்வதற்குத் தேவையான காணிப் பயன்பாட்டு இணக்கப்பாடு அத்திணைக்களங்களினால் வழங்கப்படுதல் வேண்டும்

75. காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு, அரச பெருந்தோட்டக் கம்பனி, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின்கீழ் நிர்வகிக்கப்படும் காணிகளில் அமைந்துள்ள இடமொன்றில் அகழ்வு செய்வதற்குத் தேவையான காணிப் பயன்பாட்டு இணக்கப்பாடு அந்நிறுவனங்களினால் வழங்கப்படல் வேண்டும்.

(i) வனப்பாதுகாப்புத் திணைக்களம் அல்லது இலங்கை மகாவெலி அதிகார சபை அல்லது காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அல்லது அரச காணிகளை முகாமைத்துவம் செய்யும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் காணிப் பயன்பாட்டு இணக்கப்பாட்டை வழங்கும்போது அந்தந்த இடங்களுக்காக அகழ்வு அனுமதியை வழங்கக்கூடிய அதிகபட்ச பெறுமதி தொடர்பாகத் தமது பிரதேச உத்தியோகத்தர்களுக்கு வரையறைகள் விதிக்கப் பட்டுள்ளதாயின் அவ்வரையறைகளை கவனத்தில் கொள்ளாது இணக்கப்பாட்டை வழங்குமாறு ஆலோசனை வழங்குவதற்கு அந்நிறுவனங்களின் தலைவர்களினால் நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும்.

(ii) அவ்வாறான வரையறைகள் உள்ள மேற்போந்த இடங்களில் வருடாந்தம் அகழ்வு செய்யக்கூடிய அதிகபட்ச வரையறைகள் தொடர்பான விபரங்களைப் பணியகம் மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி வகைப்படுத்தல் அட்டவணையைப் புதுப்பித்தல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன்போது பணியகத்தினால் வருடாந்த வரையறைகள் தொடர்பாக சிபாரிசுகளை வழங்க வேண்டும்.

*எல்லைகளைத் தீர்த்தல்*

76. அகழ்வுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணியொன்றின் எல்லைகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படின் கிராம உத்தியோகத்தர்/ காணி தொடர்பான அதிகாரமுள்ள உத்தியோகத்தர்/அரச நிலஅளவையாளரினால் நடாத்தப்படும் கள ஆய்வொன்று அல்லது முறையான வரைபடமொன்றின் மூலம் உறுதி செய்யப்படுதல் வேண்டும். அகழ்வு இடம் அரச முழு உரித்துரிமையுள்ள பௌதீக எல்லையினுள் அமைந்துள்ளது என உறுதிபடுத்தப்படுமாயின் அகழ்வினை ஆரம்பிப்பதற்கு முன்னதாக எல்லைகளைக் காட்டுவதன் உத்தரவாதத்தின்கீழ் அக்காணிக்கான பயன்பாட்டு இணக்கப்பாட்டை வழங்கமுடியும்.

*அரசினால் அகற்றப்பட்ட காணிகள்*

77. உறுதியாகவே அகற்றப்பட்ட காணிகளுள் (கொடைப் பத்திரங்கள் ,அளிப்பு பத்திரங்கள், நடுத்தர வகுப்பு ரீதியிலான கொடைப்பத்திரங்கள் மற்றும் நியாதன சாதன பத்திரம்) அகழ்வு செய்வதற்குக் கோரப்படும் சந்தர்ப்பங்களில் அவ் அகற்றுதல் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் இணக்கப்பாடு வழங்குவது

தேவையற்றது. எவ்வாறாயினும் இக் கொடைப்பத்திரங்கள் / அளிப்பு பத்திரங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ள காணியும் மற்றும் அகழ்வு செய்வதற்குக் கோரப்பட்டுள்ள காணியும் ஒன்றுதான் என்பதை வரைபடம் / நில வரைப்படம் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்

*அரச காணிகள் - பொது ஆலோசனைகள்*

78. ஏதேனும் அரச காணியொன்று தொடர்பாகவாயின் உரிய அதிகாரமுள்ளவர்களினால் 02 ஆம் மாதிரி ஆவணத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட இணக்கப்பாட்டு கடிதத்தின் மூலம் காணியில் அமைந்துள்ள இடமொன்றில் அகழ்வு செய்வதற்குத் தேவையான காணிப் பயன்பாட்டு இணக்கப்பாட்டை விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 07 தினங்களுக்குள் பணியகத்திற்கு விண்ணப்பதாரருக்கு பிரதியொன்றுடன் வழங்க வேண்டும்

79. நியதிச்சட்ட அரச நிறுவனங்களில் தடைநீக்கம் வழங்கும்போது பிரதான அலுவலகத்தினால் வழங்குவதற்குப் பதிலாக அகழ்வு இடத்துக்கு அருகிலேயே உள்ள மாவட்ட/பிரதேச உத்தியோகத்தர்களினால் அக் காணிக்கான பயன்பாட்டு இணக்கப்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்காக உரிய நியதிச்சட்ட அரச தலைவர்களினால் தமது மாவட்ட / பிரதேச உத்தியோகத்தர்களுக்குத் தேவையான சகல அதிகாரங்களையும் வழங்குதல் வேண்டும்.

80. அகழ்வு செய்யவேண்டிய கனிம அளவுகள் தொடர்பாக தமது பரிந்துரையில் குறிப்பிடுவது தேவையற்றதோடு அகழ்வு செய்யப்படும் அளவு மற்றும் அனுமதிப்பத்திரப் வகை என்பன பணியகத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்

81. ஏதேனும் நியதிச்சட்ட அரச நிறுவனமொன்றினால் காணி கையளித்தல் கோரும்பட்சத்தில் அது தொடர்பாக 70(11அ) உறுப்புரையின்வண்ணம் செயற்படுதல் வேண்டும்.

### 3.2 தனியார் காணிகள்

*தனியார் காணிகளைப் பயன்படுத்த ஒருமைப்பாட்டை வழங்குதல்*

82. தனியார் சொந்தத்தின்கீழ் உள்ள சொத்தொன்றில் அகழ்வு செய்வதற்குத் தேவைப்படும்போது உறுதிப்பத்திரத்துடன் அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஒருவரினால் வரையப்படமொன்றையும் விண்ணப்பதாரர் காணியின் சொந்தக்காரர் அல்லாதவிடத்து குத்தகை ஒப்பந்தம் அல்லது வேறேதேனும் சட்டபூர்வமான பரிமாற்ற ஆவணமொன்றுடன் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஒருவரினால் வரையப்பட்ட வரைப்படமொன்று விண்ணப்பதாரரால் முன்வைக்கப்படுதல் வேண்டும்

## 04. ஆம் அத்தியாயம்

### ஆரம்பக் கட்ட சுற்றாடல் பரிசோதனைகளை, சுற்றாடல் சார்ந்த அழுத்தச் செயற்பாடு மற்றும் ஏனைய தடைநீக்கங்கள் (பதிவுசெய்யப்பட்ட இடங்கள்)

அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டின்போது தேவையான வெடி ஆய்வுகள், சுற்றாடல் பரிந்துரைகள், நிலத்தடி நீர் வளங்களின் உணர்திறன்கள், மண்சரிவு ஆபத்து மதிப்பீடு மற்றும் ஏனைய தடைநீக்கங்களின் தேவைப்பாடடை முழுதாக "P1P2P3 வகைப்படுத்தல் அட்டவணையில் புதுப்பிக்கப்படும்வரை பணியகம் மற்றும் அத்தடைநீக்கம் வழங்கும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் 83 முதல் 108 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும். ஒரே நிறுவனக் கட்டமைப்பின்கீழ் பணியகத்தினால் இத் தடைநீக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று பணியகத்தினால் அதற்காகத் தேவைப்படும் வேலைத்திட்டத்தைத் தயாரித்துக் கொள்ளுதல்வேண்டும்.

**4.1 சுற்றாடல் ரீதியான பரிந்துரை :-**

*சுற்றாடல் சிபார்சு*

83. அகழ்வு இடமொன்றுக்கான உரிய சுற்றாடல் பரிந்துரைகளை வழங்கவேண்டியிருப்பின் சுற்றாடல் அதிகாரச் சபை அதனை 14 தினங்களுக்குள் வழங்குதல் வேண்டும்.

**4.2 ஆரம்பிக்கப்பட்ட சுற்றாடல் பரிசோதனைகள் /சுற்றாடல் அழுத்தங்களை மதிப்பிடுதல்**

*சுற்றாடல் தாக்க மதிப்பீடு*

84. அபிவிருத்திச் செயற்பாடுகளினால் இயற்கை மற்றும் சமூக சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை முன்கணிப்புச் செய்கின்ற செயற்பாடொன்றாக சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுச் செயற்பாட்டினை குறிப்பிட முடியும். அதனுடாக இயற்கை மற்றும் சமூகச் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைத் தடுத்தல் அல்லது குறைத்தல் மற்றும் சாதகமான தாக்கங்களை விருத்தி செய்தலுக்காக நடவடிக்கைகளை முன்மொழிதல் வேண்டும். இச்செயற்பாட்டில் ஈடுபட வேண்டியது "பரிந்துரைக்கப்பட்ட" கருத்திட்டங்கள் மட்டுமே. இச் செயற்பாட்டின்போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

*சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாடு*

(i) கருத்திட்ட ஆலோசகரினால் ஆரம்பத் தகவல்களை சமர்ப்பித்தல்

(ii) விடய தீர்மானம்(குறிப்பு விதிமுறைகள்) கருத்திட்ட முன்மொழிவாளருக்கு அனுப்புதல்

(iii) சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு / ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு அறிக்கையைக் கருத்திட்ட முன்மொழிவாளர் தயார்செய்து அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்

(iv) சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு மட்டும் பொதுமக்களின் கருத்துக்களை விசாரித்தல்.

(v) தொழில்நுட்பக் குழுவொன்றினால் அறிக்கையைப் பகுப்பாய்வு செய்தல்

(vi) தீர்மானம் எடுத்தல்

(vii) சுற்றாடல் அங்கீகாரம் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதல் தொடர்பாகத் தொடராய்வு செய்தல்.

85. செயற்படுத்தப்பட வேண்டிய கருத்திட்டத்தின் அளவு மற்றும் அதனால் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் சிறிய அளவாயின், அக் கருத்திட்டத்திற்காக ஆரம்பச் சுற்றாடல் ஆராய்வொன்றை மட்டும் செய்தல் போதுமானது. (தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகள் 722/22)

86. சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு அல்லது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுகளுக்காக ஏதேனுமொரு கருத்திட்டத்தைப் பரிந்துரை செய்வது தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகளின்படியாகும் (1993.06.24 ஆம் திகதிய 722/22 ஆம் இலக்க மற்றும் 1995.02.23 ஆம் திகதிய 859/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) அதன்வண்ணம்,

(அ) கருத்திட்டத்தின் அளவின் அடிப்படையில் பின்வரும் அகழ்வுக் கருத்திட்டங்களுக்காகச் சுற்றாடல் தாக்க மதிப்பீடு அல்லது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுச் செயற்பாடுகள் தேவையாகும்.

(i) 25 மீட்டர் அளவுக்கு மேற்பட்ட ஆழமான மேட்டுநில சுரங்க அகழ்வு மற்றும் கனிம அகழ்வு

(ii) 10 ஹெக்டயாருக்கு அதிகமான ஒட்டுமொத்த நில அளவுடனான பிரதேசங்களின் மேற்பரப்பில் கனிமங்களைப் பெற்றுக்கொள்ளுதல்

(iii) கடலில் சகல அகழ்வுகள் மற்றும் கனிம அகழ்வுப் பணிகள்

(iv) ஏதேனும் வீடுகள் அல்லது வணிகப் பிரதேசமொன்றில் கிலோ மீட்டர் 01 க்குள் சுண்ணாம்பு கல், சிலிகா, க்வாட்ஸ், மணல், கல், பளிங்கு மற்றும் அழகிய கட்டுமானங்களுக்கான கற்களை இயந்திரங்களினால் பெற்றுக்கொள்ளுதல்.

இதற்கு மேலதிகமாக அகழ்வுக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகப் பின்வரும் செயற்பாடுகள் செய்வதாயின் அவையும் கருத்திட்டங்களாக இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கமையக் கருதப்படும்.

(v) ஹெக்டயார் 01க்கு அதிகமான காணிப் பிரதேசமொன்றில் உள்ள காடுகள், காடுகள் தொடர்பல்லாத பயன்பாட்டுக்குப் பயன்படுத்தி கொள்ளுதல்

(vi) ஹெக்டயார் 50 க்கு மேற்பட்ட நிலப் பிரதேசத்தைச் சுத்தப்படுத்துதல்

(vii) ஹெக்டயார் 05 இற்கு அதிகமான பிரதேசத்தில் மரங்களை அகற்றுதல்

(ஆ) மேற்போந்த கட்டளைகளில் குறிப்பிட்டுள்ளவாறு உணர்திறன் வலயமொன்றினுள் கருத்திட்டம் அமைந்துள்ளதாயின் கருத்திட்டத்தின் அளவைப்

பொருட்படுத்தாமல் அக்கருத்திட்டத்தைச் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு அல்லது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுச் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**கரையோர வலயத்தில் சுற்றாடல் தாக்கங்கள் ஆய்வு**

*சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ அடிப்படைச் சுற்றாடல் ஆய்வுக் கற்றாராய்வு - கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்*

87. கருத்திட்டம் அமைந்துள்ளது "கரையோரப் பகுதி" யாயின் பணியகத்தினால் அம்மதிப்பீட்டுக்காகக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்திடம் விசாரித்தல் வேண்டும் "கரையோர வலயத்திற்கு" உட்படும் பிரதேசம் தொடர்பாகக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. "கரையோர வலயம்" என்று உயர் நீர்க்குறியிலிருந்து கரையைநோக்கி 300 மீட்டர் எல்லையும் மற்றும் தாழ் நீர்க குறியிலிருந்து கடலை நோக்கி இரண்டு கிலோ மீட்டர் எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேசம் கருதப்படுவதோடு நிரந்தரமாக அல்லது காலத்திற்குகாலம் கடலோடு தொடர்புபட்ட ஆறுகள், நீர் ஓட்டங்கள், களப்புகள் அல்லது வேறு ஏதேனும் நீரத்தொகுதியொன்று தொடர்பாக எடுத்துக்கொள்ளும்போது, கரையோரப் பகுதிக்கான எல்லை அவற்றின் இயற்கை நுழைவுப்புள்ளிக்கும் இடையே வரையப்பட்ட நேர்கோட்டுக்குச் செங்குத்தாக அளக்கப்பட்ட கிலோ மீட்டர் இரண்டான எல்லைக்குப் பரவவேண்டியதோடு, அவ்வாறு கடலோடு தொடர்புகொள்ளும் அந்த ஆறுகள், நீரோடைகள் மற்றும் களப்புகள் அல்லது வேறேதேனும் நீர்த் தொகுதியொன்று மற்றும் எல்லையினூடாகக் கடல்மட்டத்திலிருந்து கரை திசைக்கு 100 மீட்டரினால் நீட்டப்பட்ட தூர எல்லையிலான பிரதேசமும் உள்ளடங்கும்.)

**வனச் சீவராசிகள் பாதுகாப்புப் பிரதேசங்களினுள் சுற்றாடல் தாக்கங்கள் ஆய்வு**

*சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ அடிப்படைச் சுற்றாடல் ஆய்வுக் கற்றாராய்வு - வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்*

88. கருத்திட்டம் அமைந்துள்ளது (சரணாலயங்கள் தவிர) விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் கட்டளை சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட தேசிய பாதுகாப்பகமொன்றின் எல்லையிலிருந்து கிலோ மீட்டர் 1.5 தூர எல்லைக்குள் ஆயின் பணியகத்தினால் அம்மதிப்பீட்டுக்காக வனச் சீவராசிகள் திணைக்களத்திடம் விசாரித்தல் வேண்டும்

**வனப் பாதுகாப்புக் காப்பகப் பிரதேசங்களினுள் சுற்றாடல் தாக்கங்கள் ஆய்வு**

*சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ அடிப்படைச் சுற்றாடல் ஆய்வுக் கற்றாராய்வு - வனச்சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்*

89. விசேட சுற்றாடல் முக்கியத்துவமுள்ள நிலப்பகுதியொன்றில் குறித்த கருத்திட்டம் செயற்படுமாயின் நிலஅளவினைக் கவனத்திற் கொள்ளாது சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டுச் செயற்பாடொன்றைச் செய்யவேண்டியதோடு அதிவிசேட முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் உணர்திறன்மிக்க வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளினுள் அதற்கு எந்தவிதத்திலானதுமான பாதக தாக்கங்கள் ஏற்படும் கருத்திட்டங்களுக்காக அனுமதியளித்தல் ஆகாது.

90. அகழ்வுக் கோரிக்கையொன்று கிடைத்ததன்பின்பு, உத்தேச கருத்திட்டத்தை நிராகரிப்பதாயின் அது தொடர்பாக அல்லது பயன்படுத்தபடும் நிலப்பகுதி பாதுகாப்பு வனப் பிரதேசமொன்றுக்கு

உரியதாயின் அல்லது வனப் பாதுகாப்பு திணைக்களத்தின்கீழ் நிர்வாகிக்கப்படும் ஹெக்டயார் 01 க்கு அதிக நிலப்பகுதியொன்றாயின் அக் கருத்திட்டம் தொடர்பான சுற்றாடல் பாதுகாப்பு மதிப்பிடல் செயற்பாடொன்று நடத்துதல் வேண்டுமெனக் கருத்திட்ட முன்மொழிவாளர் அல்லது பணியகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

**ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு / சுற்றாடல் தாக்கங்கள் ஆய்வு தொடர்பான பொது அறிவுறுத்தல்கள்**

91. ஏதேனும் கருத்திட்டமொன்றின்கீழ் அரச அல்லது தனியார் காணியொன்றினுள் கருங்கல், மணல், மண், சரளைக்கல் மற்றும் களிமண் அகழ்வுசெய்யும் சந்தர்ப்பத்தில் சுற்றாடல் அனுமதியை வழங்கவேண்டிய சந்தரப்பத்தில், உரியவாறு ஆரம்பச் சுற்றாடல் ஆய்வொன்று, சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடொன்று மற்றும் தொல்பொருள் தாக்கங்கள் மதிப்பீடொன்று செய்தல் வேண்டும். அதன்போது கருத்திட்ட முன்மொழிபவரினால் ஆய்வு / மதிப்பீட்டு செயற்பாட்டுக்கான செலவினை ஏற்றுக்கொள்ளவேண்டும்

92. தமது தேவையைக் கருத்திட்ட ஆலோசகரினால் சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டியதோடு சுற்றாடல் அதிகாரச் சபையினால் கருத்திட்டத்தை அங்கீகரிப்பதற்காகப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு உப உத்தேச நிறுவனங்களாகச் செயற்படும் சுற்றாடல் அதிகார சபை அல்லது கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் அல்லது வனச் சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அல்லது வனப் பாதுகாப்பு திணைக்களத்தை குறிப்பிட்டதன் பின்பு சுற்றாடல் மதிப்பீட்டுச்செயற்பாட்டைத் தொடங்குதல்வேண்டும்.

*அகழ்வு தொடர்பான சுற்றாடல் கற்றாராய்வு*

93. கருத்திட்டமொன்றுக்கல்லாது கருங்கல், மணல், மண், சரளைக்கல் மற்றும் களிமண் அகழ்வுக்காகப் பொருத்தமானது என ஆரம்பக் கண்டறிதலைச் செய்யும் அரச காணிகளுக்காகச் சுற்றாடல் அனுமதியை வழங்கவேண்டிய சந்தர்ப்பங்களிலும் பொருத்தமானவாறு சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடொன்றை அல்லது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வொன்றைச் செய்தல்வேண்டும். இதன்போது கருத்திட்ட முன்மொழிவாளராகப் பணியகம் செயற்படுதல்வேண்டும். அதன்போது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு, சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு மற்றும் தொல்பொருள் தாக்கங்கள் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கான செலவினையும் பணியகத்தினால் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

94. கருங்கல், மணல், மண், சரளைக்கல் மற்றும் களிமண் அகழ்வுக்கு பொருத்தமானதாக ஆரம்பக் கண்டறிதல் செய்யப்படும் அரச காணிகளுக்காகச சுற்றாடல் அனுமதியை வழங்கவேண்டிய சந்தர்ப்பங்களில் கருத்திட்ட முனமொழிவொன்றைத் தயார்செய்து உரியவாறு சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடொன்று அல்லது ஆரம்புச் சுற்றாடல் ஆய்வொன்றை நடத்துதல் வேண்டும்.

95. மேற்போந்த சந்தர்ப்பங்களில் அல்லது வேறேதேனும் அரச அல்லது தனியார் சந்தர்ப்பங்களில் கருத்திட்டத்தின் சுற்றாடல் அனுமதியை வழங்குவதற்குப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு உப உத்தேச நிறுவனமாக செயற்படும் சுற்றாடல் அதிகார சபை அல்லது கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் அல்லது வனச் சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அல்லது விண்ணப்பதாரரினால் உண்மையான விபரங்களுடன் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கப்படும் ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு அறிக்கையொன்று /

சுற்றாடல் தாக்கங்கள் அறிக்கையொன்றுக்காக உரிய, நிபந்தனைகள், சட்டதிட்டங்கள் / விடயத்தை தீர்மானித்தல் (TOR) விண்ணப்பம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 தினங்களுக்குள் விண்ணப்பதாரருக்கு வழங்குவதற்கு மேற்போந்த நிறுவனம் செயற்படுதல் வேண்டும்

*எடுக்கவேண்டிய காலம்*

(i) இறுதியான சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடுகள் அல்லது ஆரம்பச் சுற்றாடல் ஆய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதிமுதல் ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுகளைக் கற்றாராய்வதற்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் 01 ½ மாதங்களுக்குள் சுற்றாடல் பாதிப்புகள் மதிப்பீடு கற்றாராய்வதற்கு அனுப்பப்படும் சந்தர்ப்பங்களில் 03 மாதங்களுக்குள் அவ்வறிக்கைகள் மற்றும் கருத்ததிட்டத்திற்கான அனுமதிகளை வழங்குவதற்கு அந் நிறுவனங்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும் கருத்திட்ட முனமொழிவாளரினால் விடய தீர்மான அட்டவணையைப் பெற்றுக்கொண்டதன் பின்பு கருத்திட்ட அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்ட அறிக்கையில் தரப்படும் தவறுகளைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிப்பதற்கு எடுக்கும் காலம் இம் 03 மாத காலத்திற்கு உள்ளடங்கமாட்டாது. இம் மூன்று மாதங்கள் கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனத்தினால் குறித்த செயற்பாட்டினைப் பின்பற்றுவதற்கு எடுக்கும் காலமாக வேண்டும்.

96. பரிந்துரைகள்/அங்கீகாரம் வழங்குவதற்கு எடுக்கும் காலஎல்லைகள் அரசாங்கத்தினாயினும் தனியார் பிரிவுகளினாயினும் ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும்.

97. சகல காரணிகளையும் ஆராய்ந்துபார்த்ததன் பின்பு கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனத்தினால் சுற்றாடல் அதிகார சபையினதும் இணக்கப்பாட்டுடன் நிபந்தனைகளுடன் அல்லது நிபந்தனைகள் இல்லாது குறித்த கருத்திட்டத்தை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் வேண்டும். உத்தேச கருத்திட்டத்தை அங்கீகரிப்பது பொருத்தமாயின் குறிப்பிடப்பட்ட காலஎல்லைக்குச் செல்லுபடியாகும் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்றைக் குறித்த கருத்திட்டத்திற்காக வழங்கவேண்டும்.

98. “ஒரே நிறுவனக் கட்டமைப்பின்” கீழ் பணியகத்தினால் சகல சுற்றாடல் ஆய்வுகள் மற்றும் தாக்கங்கள் மதிப்பீட்டுச் செயற்பாட்டை ஒருங்கிணைத்தல் வேண்டும்.

### 4.3 தொல்பொருள் பரிந்துரை / தொல்பொருள் அழுத்தங்களை கற்றாராய்தல்

99. இலங்கையின் ஒட்டுமொத்தத் தொல்பொருள் உரிமையை முழுதாக இனங்கண்டு அறிக்கையிட்டு இல்லாததனால் சகல புதிய கனிம மற்றும் பாறைகளைப் பிரித்தெடுக்கும் இடங்களுக்கும் களப் பரீட்சையொன்றை நடாத்தி தொல்பொருள் அறிகுறிகள் தென்படவில்லையெனில் தொல்பொருள் பரிந்துரையொன்றை / மதிப்பீட்டுக் மீளாய்வொன்றை வழங்கமுடியும்.

*தொல்பொருள் சிபார்சு தாக்க மதிப்பீடு*

100. 0.25 ஹெக்டயாருக்குக் குறைந்த புவி வளங்களை அகழ்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது பணியகத்தினால் தொல்பொருள்

*தொல்பொருள் திணைக்களம்*

பரிந்துரைகளைக் கோரியபின்பு பிரதேச தொல்பொருள் அலுவலகத்தினால் நிபந்தனைகளுடன் கனிம மற்றும் பாறைகளைப் பிரித்தெடுப்பதற்காகப் பரிந்துரையை வழங்குதல் வேண்டும். (ஏதேனும் நிலமொன்றைப் பரீட்சித்துப்பார்த்து மேல் மட்டத்தில் தொல்பொருள்கள் இல்லையென்று பரிந்துரை செய்ததன்பின்பு மீண்டும் பரீட்சித்துப் பார்ப்பது தேவையற்றது. அதன்போது பரிந்துரையில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் நடைமுறையிலிருக்கும்)

101. ஹெக்டயார் 0.25 க்கு கூடிய நில வளங்களை ஆய்வுக்கான (மண்,சரளைக்கல், கருங்கல்) கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக உத்தேசிக்கப்பட்ட காணியின் தொல்பொருள் தாக்க மதிப்பீட்டுக் கணிப்பொன்றைச் செய்தல் வேண்டும். தொல்பொருள் திணைக்களத்திற்கு நிலம் தொடர்பான விபரங்கள் கிடைத்த உடனேயே பிரதேச தொல்பொருள் அலுவலகத்திலிருந்து ஆரம்பக் கண்கானிப்பு அறிக்கையொன்று பெறப்படுவதோடு, அதன்போது மேல்மட்டத்தில் தொல்பொருள் அறிகுறிகள் இல்லாவிடில் அந்நிலத்தை விடுவிப்பது பொது நிபந்தனையின்கீழ் செய்தல்வேண்டும். (1998 ஆண்டின் 24ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தங்கள்) சட்டத்தின் 43(அ) உறுப்புரையுடனுள்ள 47 ஆம் உறுப்புரையின்கீழ் ஏற்படுத்தியுள்ள கட்டளைகள்)

102. பிரதேசத்தில் தொல்பொருள்கள் உள்ளபடிக்கு அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் தொல்பொருள் தாக்கங்கள் மதிப்பீடொன்று தேவையெனப் பிரதேச தொல்பொருள் அலுவலகத்தினால் பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்கவேண்டும். அப்போது கருத்திட்ட முன்மொழிவாளர் மற்றும் பணியகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

103. தாக்கங்கள் மதிப்பீட்டின்போது தொல்பொருள் தேசிய கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுத் தூபிகளை வகைப்படுத்தி குறித்த அபிவிருத்திப் பணிக்கு வசதி வழங்கக்கூடிய விதத்தை முன்மொழிவுகளுடன் குறிப்பிட்டு பரிந்துரையை வழங்குதல் வேண்டும்.

104. தொல்பொருள் விசாரணையைக் கோருவதற்கு முன்னதாக குறித்த நிலத்தை கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி அகழ்வுசெய்து அல்லது மேல்மட்ட மண்படிவுகளை அகற்றி உள்ளதாயின் அல்லது அவ்வாறான இடமொன்றில் தொல்பொருள் அறிகுறிகள் அகற்றப்பட்டுள்ளதாயின் அதற்கு எதிராகத் தொல்பொருள் கட்டளைச் சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

105 தொல்பொருள் திணைக்களத்தினால் ஆரம்ப கண்காணிப்பொன்றின்மூலம் பொது நிபந்தனைகளின்படி பரிந்துரைகள் வழங்குவதாயின் 14 தினங்களுக்கு உள்ளாகவும் தொல்பொருள் தாக்கங்கள் மதிப்பீட்டு ஆய்வொன்றைச் செய்வதானால் கருத்திட்ட முன்மொழிவாளர் தாக்கங்கள் மதிப்பீட்டுக்காகப் பணம் செலுத்தியபின்பு 03 மாதங்களுக்குள் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டும் (கருத்திட்ட முன்மொழிவாளரினால் விடய தீர்மான அட்டவணையைப் பெற்றுக்கொண்டதன் பின்பு கருத்திட்ட அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்ட அறிக்கையில் காட்டப்படும் தவறுகளைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிப்பதற்கு எடுக்கும் காலம் இம் 03 மாத காலத்திற்கு உள்ளடங்காது. இம் 03 மாதங்கள் கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனத்தினால் உரிய செயற்பாட்டு

விதிமுறைகளை பின்பற்றுவதற்காக எடுக்கும் காலமாக வேண்டும்)

**4.4 தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் மண்சரிவு ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் அறிக்கைகள்**

*மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டு அறிக்கை*

106. மண்சரிவுகள் ஏற்படக்கூடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களினுள் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்காகத் தேசிய கட்டிடங்கள் ஆய்வு அமைப்பின் முன்அனுமதியை பெறுதல்வேண்டும். மேலும் வேறொரு மாவட்டத்தினுள் அமைந்திருந்தாலும் கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் இடத்தை அண்டியதாக மண்சரிவுகள் / நில உறுதியற்றதன்மை ஆபத்து உள்ளதாகக் கருத்திட்டத்தை அனுமதிக்கும் நிறுவனம் கணிக்குமாயின், அவ்வாறான இடங்களுக்கும் கருத்திட்ட முன்மொழிவாளரினால் தேசியக் கட்டிடங்கள் ஆய்வு அமைப்பின் முன்அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**4.5 தேசிய நீர்வளங்கள் சபையினால் மேற்கொள்ளப்படும் நிலத்தடி நீர் வளங்களின் உணர்வுத்தன்மை**

107 கருத்திட்டத்தை நடத்தும் இடத்தை அண்டியதாக நிலத்தடி நீர்வளங்கள் உணர்திறன் ஆபத்து இருப்பதாகப் பணியகத்தினால் அவதானிக்கப்படுமாயின், அவ்வாறான இடங்களுக்கும் கருத்திட்ட முன்மொழிவாளரினால் தேசிய நீர்வளங்கள் சபையின் முன்அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**4.6 நகர அபிவருத்தி வலயங்களினுள் நகரத்திட்டங்களைத் தீர்க்கும் அறிக்கைகள்**

108. கருத்திட்டத்தை செயற்படுத்தும் இடம் நகர்ப்புற அபிவிருத்தி வலயமொன்றினுள் அமைந்திருப்பின், அவ்வாறான இடங்களுக்காகவும் கருத்திட்ட முன்மொழிவாளரால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முன் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்

## 05. ஐந்தாம் அத்தியாயம்

### அபிவிருத்திக் கருத்திட்டங்கள்,சுயதொழல்கள் மற்றும் பாரம்பரிய தொழில்கள், சிறுபொருளாதார வாழ்வாதார தேவைகளுக்காக அனுமதிப் பத்திரங்கள் / உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல் (பதிவு செய்யப்படாதவை)

*அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகள்*

பதிவுச் செய்யப்படாத - வர்த்தகமல்லாத மற்றும் விசேட தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் கனிம அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லுதல் தொடர்பாகப் பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அல்லது இலங்கை மகாவெலி அதிகார சபையின் ஆணையாளர் நாயகம்/பணிப்பாளர் நாயகம் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கடைபிடிக்கவேண்டிய செயல்முறை இந்த அத்தியாயத்தில் வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத இந்தத் தேவைகளுக்காகச் சட்டத்தின்கீழ் அகழ்வு உரிமங்கள் பெற்றுக்கொள்ளும் தேவை இல்லாதபோதிலும் அகற்றப்படும் சரளைக்கல் மற்றும் சகதிகளைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஏற்றிச்செல்லும்போது சுற்றாடல்ரீதியாக ஏற்படும் சிக்கலான நிலைமைகளை நிர்வகிப்பதற்காக உரிமப் பத்திரமொன்றின்கீழ் ஏற்றிசெல்வதற்காகப் பணியகத்தினால் மேல் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (சட்டத்தின் 8(1) மற்றும் 8(2) பிரிவுகள்)

**5.1 களிமண் அகழ்வு மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேசச் செயலாளரால் சிறு அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்கல்.**

*பாரம்பரிய மற்றும் சிறு வாழ்வாதார செயல்பாடுகளுக்காக களிமண் தொடர்பான சிறியளவிலான அனுமதி பத்திரங்கள்*

109. தேசிய அருங்கலைகள் பேரவையினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் மூலமாக அல்லது பிரதேச செயலாளரினால் பாரம்பரிய களிமண் கைத்தொழிலில் ஈடுபடுபவராக உறுதிச் செய்யப்பட்டு ஒரு முறைக்கு 03 கியூப் அகழ்வுக்கு மற்றும் ஒருவருக்கு மாதத்திற்கு 06 கியூப் ஆக பிரதேச செயலக மற்றும் மாவட்ட எல்லைகளை பொருட்படுத்தாது களிமண் ஏற்றிச்செல்வதற்காகப் பிரதேச செயலாளரினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்காக எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படக் கூடாது. களிமண் அகற்றப்பட்ட பின்னர் அவ்விடங்களை மறுசீரமைத்தல் தொடர்பாகப் பிரதேச செயலாளரினால் தொடராய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

*அனுமதி பத்திரங்களை விண்ணப்பித்தல் மற்றும் சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள*

110. இதன் கீழ், அகழ்வு/ ஏற்றிச் செல்லுதல் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரர்களினால் படிவம் 4.1 வழங்க வேண்டியதோடு, அதனுடன் கீழ்வரும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் 4.2 மாதிரிப் படிவத்தில் காட்டப்படும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

(i) பாரம்பரிய களிமண் கைத்தொழிலில் ஈடுபடுபவர் என்பதற்கான தேசிய அருங்கலைகள் பேரவையினால் வழங்கப்படும் சான்று.

(ii) களிமண் பெற்றுகொள்வதற்காக எதிர்பார்க்கும் இடத்தின் உரிமம் மற்றும் வரைப்படப் பிரதிகள்

(அ) தேவையான களிமண் இருப்பது கமநல அபிவிருத்தித்

திணைக்கள, நீர்ப்பாசனத் திணைக்கள அல்லது இலங்கை மகாவெலி அதிகார சபை போன்ற நிறுவனங்களினால் முகாமைத்துவம் செய்யும் காணிகள், சிறிய நீர்க் கால்வாய்கள் மற்றும் வயல்வெளிகளுடன் இணைந்துள்ளதாயின், சிறப்பான அளவில் அப்புவியியல் வளங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை அந்த நிறுவனம் வெளிப்படுத்த வேண்டும்.

### 5.2 மண் அல்லது சரளைக்கல் அகழ்தல் மற்றும் கொண்டு செல்வதற்காக கிராம உத்தியோகத்தரினால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

*அனுமதிப்பத்திரம் வழங்கும்போது கிராம உத்தியோகத்தர் கவனிக்க வேண்டிய விடயங்கள்.*

111. தனிப்பட்ட பாவனைக்காகக் கட்டிடமொன்றை அமைப்பதோடு இணைந்த செயல்பாடுகளுக்காக மண் அல்லது சரளைகற்கள் 35 கியூப்களுக்கு மீறாத அளவில் தனது சட்டரீதியான உரிமம் கொண்ட காணியிலிருந்து அகற்றும் தேவை ஏற்படும்போது, அந்தக் காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவினுள் அல்லது அப்பிரிவினைப் பொருட்படுத்தாது காணிக்கு உரித்தான கிராம அலுவலர் பிரிவினுள் 02 கியூப் அல்லது அதற்குக் குறைவான பொருத்தமான ஏற்றிச்செல்லும் வழிமுறையொன்றைப் பயன்படுத்தி மு.ப. 6 இலிருந்து பி.ப. 6 மணிவரையான காலத்தில் அவற்றை ஏற்றிச்செல்வதற்காக காணி அமைந்துள்ள கிராம உத்தியேகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரல் ஏற்றிச்செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கமுடியும்.

(i) மேல்குறிப்பிடப்பற்ற மண் அல்லது சரளைக்கல் அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லுதல் சுற்றாடலுக்கும் மற்றும் பொது மக்கள் வாழ்க்கைக்கும் தாக்கம் ஏற்படாதவாறு இடம்பெறுவது மற்றும் குறிப்பிட்ட உரிமம் கொண்ட உரிமையாளரின் காணியிலிருந்து அகற்றலினால் எந்த விதத்திலும் 35 கியூப்களுக்கு மேலாகப் பொருட்களை அகற்றல் ஏற்படாதவாறு உரிய கிராம உத்தியோகத்தரினால் தனிப்பட்ட விதமாக உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) ஒரு வாரத்தில் மூன்று தடவைகளுக்கு மாத்திரம் கிராம உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் வழங்க முடியுமென்பதுடன் அதற்கு மேலான சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

(iii) வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான பதிவேடொன்று கிராம உத்தியோகத்தரால் பேணப்படுதல் வேண்டும். மேலும், வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்று கிராம உத்தியோகத்தரால் தமது பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*அனுமதி பத்திரத்திற்காக விண்ணப்பிக்க வேண்டிய முறைமை*

(iv) இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்பவரினால் 4.1 படிவத்துடன் காணி உரிமையாளரை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான உரிமப்பத்திரம் மற்றும் வரைப்படப் பிரதிகள் மற்றும் காணிக்கான பாதையைக் காட்டும் ஆவணமொன்று கிராம உத்தோயோகத்தருக்கு வழங்கப்பட வென்றும். கிராம உத்தியோகத்தர்/பிரதேச செயலாளர் 4.2 படிவத்திற்கு அமைவாக அனுமதிப்பத்திரத்தை வழங்க வேண்டும்.

## 5.3 மண் அல்லது சரளைக்கல் அகழ்தல் மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேச செயலாளரால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

*வர்த்தகமல்லாத தேவைகள் மற்றும் சிறு பொருளாதார வாழ்வாதாரத் தேவைகளுக்குகாக மண் அல்லது சரளைக்கற்கள் அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமை*

112. வர்த்தகம் அல்லாத தேவைகள் மற்றும் சிறு பொருளாதார வாழ்வாதாரத் தேவைகளுக்குக்காகக் களிமண் அல்லது சரளைகற்கள் போன்ற மூலப்பொருட்களானது ஒரு அகழ்வு இடத்திலிருந்து அதிகூடியபட்சம் 100 கியூப்களை மீறாதஅளவில் ஒரு காணியிலிருந்து அகற்றுவதற்கு ஒருவர் விண்ணப்பிப்பதாயின், அக்காணி அமைந்துள்ள கிராம உஉத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் அல்லது சுற்றாடல் உத்தியோகத்தரினால் களப்பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைகள் உட்பட அறிக்கையைத் தமது பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ் அறிக்கையைப் பரிசீலித்தபின்னர், தேவையாயின் பிரதேச சுற்றாடல் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள பிரதேச செயலாளர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அதற்கமைய, குறிப்பிட்ட காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவினுள் அல்லது அதற்குச் சமீபமான பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மு.ப. 6 இல் இருந்து பி.ப. 6 மணிவரை மூலப்பொருட்களை ஏற்றிச்செல்ல அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு உரித்தாகும். அனுமதி பத்திரம் வழங்கும்போது பணியகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரப் படிவங்களை உபயோகிக்க வேண்டும்.

*அனுமதி பத்திரங்கள் வழங்கும்போது பிரதேச செயலாளரினால் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்*

(i) மேல்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய அகற்றப்படும் மூலப்பொருட்களைக் குறிப்பிட்ட காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவிற்கு உள்ளடங்காத நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் ஏற்றிச்செல்ல தேவை ஏற்படும் பட்சத்தில் அதற்காக அகற்றல் மேற்கொள்ளப்பட்ட காணி உட்படும் அதிகாரப் பிரிவின் பிரதேச செயலாளரினால், மாவட்ட செயலாளரின் அனுமதியுடன் ஏற்றிச்செல்லும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படலாம். அவ்வாறு வழங்குகையில் குறிப்பிட்ட திட்டத்தின் பெயர் மற்றும் பயண இலக்கு உள்ளடங்கலாக ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

(ii) ஆனாலும், அகழ்வு காரணமாக வெளியேறும் திரவ மூலப்பொருட்கள் ஒரு முறைக்கு 100 கியூப்களுக்கு மேலாக அகற்றபடாதது தொடர்பாகப் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்த வேண்டியதோடு, இந்த மண் அல்லது சரளைகற்கள் அகற்றுதலின்மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது தொடர்பாகத் தேவையான சந்தர்ப்பங்களில் பணியகம், சுற்றாடல் அதிகார சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தேசியக் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அல்லது வேறேதேனும் குறிப்பிட்ட சான்றுகள் பெறவேண்டிய நிறுவனங்கள் இருப்பின் அவற்றின் மேற்பார்வைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படும் உரிம/ அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி சட்ட ரீதியான

அனுமதி இல்லாத வயல்வெளி, சேற்றுநிலம், பாதுகாக்கப்பட்ட காணிகள் அல்லது வேறேனும் சுற்றாடல் உணர்திறன்மிக்க நிலத்தை நிரப்புவதற்காக மண் அல்லது சரளைக்கற்களைப பயன்படுத்துதல் அல்லது அனுமதி பெறவேண்டிய ஓர் இடத்திற்கு அனுமதி இல்லாது வெளியேற்றுதல் சட்டவிரோத செயலானதால் அவ்வாறான சட்ட விரோதச் செயல்பாடுகள் இடம்பெறாமை தொடர்பாக கவனம் செலுத்துவது அனுமதி வழங்கும் அதிகாரியின் பொறுப்பாகும். மேலும், அவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் குறிப்பிட்ட அதிகாரி செயல்பட வேண்டும். இந்த உறுப்புரையைமீறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கிய அதிகாரியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iv) இந்த ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரர் 4.3 விண்ணப்பப் படிவத்துடன் காணியின் உரிமையாளரை உறுதிப் படுத்துவதற்கான உரிமைப் பிரதிகள் மற்றும் வரைபடம் காணிக்கு செல்லும் பாதையை காட்டும் குறிப்பொன்று என்பவற்றை வழங்கவேண்டும். பிரதேச செயலாளர் 4.2 இல் குறிப்பிட்டுள்ள அகழ்வு / ஏற்றிச் செல்லுதல் அனுமதிப் பத்திரத்தை வழங்கவேண்டும். பிரதேச செயலாளரிடம் விண்ணபத்தைச் சமர்ப்பித்து ஏழு நாட்களுக்குள் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.

(v) இந்தச் செயல்பாட்டின்கீழ் மண் அல்லது சரளைகற்கள் 100 கியூப்களுக்கு மேலாக அகழ்வு மேற்கொள்ளும்போது பணியகத்தின் அனுமதிபெற வேண்டும். அதற்காக விண்ணப்பப்படிவம் 4.4 ஐ பூர்த்திசெய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

### 5.4 கருங்கல்,அகழ்தல் மற்றும் கொண்டுசெல்வதற்காக பிரதேசச் செயலாளரால் அனுமதிப்பத்திரங்களை வழங்கல்

*கருங்கல் தொடர்பான சிறியளவிலான அனுமதி பத்திரங்கள்*

113. ஒரு தடவைக்கு 35 கியூப்களுக்கு மேற்படாத அளவை வர்த்தகமல்லாத கருங்கல் அகழ்வுகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு உரித்தாகும். தனிப்பட்ட கிணறு ஒன்றுக்கு, வீடொன்றுக்கு தடையாகும், மண் சரிவு ஏற்படக்கூடிய, அவசர அபாயமொன்றுக்கு உட்படக்கூடிய, பொதுமக்கள் வாழ்வுக்கு அல்லது சொத்துக்களுக்கு ஆபத்தாகக் கூடிய இடங்களில் அமைந்துள்ள கருங்கல்போன்று மாவட்ட / பிரதேச ஒருங்கிணைப்பு/ சுற்றாடல் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வர்த்தகம் அல்லாத கருங்கல் அகற்றுதல் மேற்கொள்ளப்படலாம். இதற்காகவும் மேல்குறிப்பிட்ட 112 (ii) இல் வழங்கப்பட்டுள்ள அளவுகோல்களை கவனத்தில்கொள்ள பிரதேச செயலாளரினால் பொறுப்பேற்க வேண்டும். ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் பணியகத்தின் தொழில்நுட்ப ஆதரவு தேவையென அவதானிக்கப்படுமாயின் பிரதேச செயலாளரினால்

உடனடியாகப் பணியகத்தின் ஆலோசனைகளைப் பெற்று உரிய தொழில்நுட்ப அறிவுரைகளின்கீழ் அந்தச் செயற்பாடு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**5.5 மணல் அகழ்வு மற்றும் கொண்டு செல்வதற்காக பிரதேசச் செயலாளரால் சிறிய அளவிலான அனுமதிப்பத்திரங்களை வழங்கல்**

*மணல் தொடர்பான சிறியளவிலான அனுமதி பத்திரங்கள்*

114. வீடொன்றை அமைப்பதற்காக ஒருவருக்கு நீர் வழிமூலங்களிலிருந்து, சிறிய கிளை ஆற்றிலிருந்து, சிறிய ஓடை ஒன்றிலிருந்து (நீதிமன்ற நடவடிக்கையொன்றினால் தடைசெய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் மற்றும் கரையோரப் பகுதிகளை சார்ந்த பிரதேசங்கள் தவிர்த்த) 02 கியூப் மணல் அகழ்வுசெய்து ஏற்றிச்செல்வதற்கு இடமளிக்கப்படும். இவ்வாறு ஒரு மாதத்திற்கு அதிகூடிய பட்சமாக 100 கியூப் மணல் வர்த்தகமற்ற தேவைகளுக்குத் தமது பிரதேச செயலகப் பிரிவினுள் அகற்றுவதற்கும் ஏற்றிச்செல்வதற்கும் பிரசதேச செயலாளர்களினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கலாம். இந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக, விண்ணப்பதாரி 4.3 படிவத்தைப் பூர்த்திச்செய்து வழங்கவேண்டும். பிரதேச செயலாளர் படிவம் 4.2 அமைவாக அனுமதிப்பத்திரத்தை வழங்குல்வேண்டும்.

(i) அகழ்வுக்கான அனுமதியினை வழங்கப்படும் இடத்தின் அமைவு மற்றும் பரப்பெல்லையைக் குறிப்பாகக் கண்டறிவதற்கு முடியுமானவகையில் அவ் அனுமதியை வழங்குதல் வேண்டும்.

**5.6 அரசின் விசேட கருத்திட்டங்களுக்கு மண் மற்றும் சரளைக்கல் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளரால் / அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களினால் அனுமதிப்பத்திரம் வழங்குதல்**

*பிரதேச அல்லது வலயத்தின் அரச அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பிரதேச செயலாளர் அனுமதி வழங்குதல*

115. அரச கருத்திட்டம் ஒன்றுக்காக மண் அல்லது சரளைக்கற்கள் பெற்றுக்கொள்ளும் கடினமானநிலை இருப்பதாக ஏதேனும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் அவதானிக்கப்படுமாயின், குறிப்பிட்ட அபிவிருத்திச் செயல்பாட்டில் ஈடுபடும் அரச சார்பற்றதரப்பினருக்கு மாவட்டச் சுற்றாடல் குழு பரிந்துரைக்கும் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள இடமொன்றிலிருந்து மண் அல்லது சரளைக்கற்கள் கியூப் 100 அகழ்வு உரிமம் மற்றும் அதற்கான ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திரமும் பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட வேண்டும். பொதுவாக அறவிடப்படும் சகல கட்டணங்களும் பணியகத்திற்காக பிரதேச செயலாளரினால் அறவிடப்பட வேண்டும்.

(i) அருகாமையிலுள்ள மாவட்ட சுற்றாடல் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பமொன்றையும் இதில் கவனத்தில் கொள்ளலாம்.

(ii) இந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக அகற்றப்படும் மூலப்பொருட்கள் குறிப்பிட்ட காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவிற்கு அருகில் இல்லாத ஏதேனும் திட்டமொன்றுக்காக ஏற்றிச்செல்லுவதாயின் மாத்திரம் பயண இலக்காகத் திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு அதற்காகக் ஏற்றிச்செல்வதற்கு அனுமதிவழங்க பிரதேச செயலாளருக்கு அதிகாரமுண்டு.

பிரதேச செயலாளரினால் வழங்க வேண்டிய அகழ்வு

மற்றும் ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திர மாதிரிப் படிவம் 4.42 இல் வழங்கப்பட்டுள்ளது.

*நேரடி ஒப்பந்தங்கள் முறையில் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களுக்கு மண்,சரளைக்கற்கள் பெற்றுகொள்ள வழங்கும் அனுமதிப் பத்திரங்கள்*

116. நேரடி ஒப்பந்தங்கள் முறையில் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களுக்கு குறிப்பிட்ட காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவிற்குள் 100 கியூப்வரை மண், சரளைக்கற்கள் அகற்றுவதற்கும் அவற்றைக் குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவிற்குள் அல்லது அதற்கு அருகாமையிலுள்ள பிரதேச செயலகப் பிரிவிற்குள் ஏற்றிச்செல்வதற்கும் பிரதேச செயலாளரினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாம்.

(i) குறிப்பிட்ட அரச அல்லது உள்ளூராட்சி நிறுவனம் இதில் விண்ணப்பதாரியாக இருத்தல் வேண்டும். உரிய நிறுவனத்தால் குறிப்பிட்ட திட்டத்திற்காக மண், சரளைக்கற்கள் பெற்றுக்கொள்வது வர்த்தக அடிப்படையில் அல்ல என்பதை உறுதிசெய்து பிரதேச செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும். பிரதேச செயலாளரினால் வழங்க வேண்டிய அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திர மாதிரிப் படிவம் 4.2 இல் வழங்கப்பட்டுள்ளது.

*குளங்களை அபிவிருத்திச் செய்வதற்காகத் தேவையான மண், சரளைக்கற்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் அனுமதி பத்திரம் வழங்கப்படுதல்*

117. குளங்கள், அணைக்கட்டுகளை அபிவிருத்திச் செய்யும் தேசியச் செயல்திட்டத்தின்கீழ் குளங்கள் அணைக்கட்டுகளின் அணைகளை வலுப்படுத்தத் தேவையான மண், சரளைக்கற்கள் பெற்றுக்கொள்ளும்போது மற்றும் மண் மற்றும் சேறுகளை அகற்றும்போது அதேபோன்று அவற்றை ஏற்றிச்செல்லும்போது தேவையான அனுமதிப்பாத்திரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின், நீர்ப்பாசன திணைக்களத்தின் அல்லது மகாவலி அதிகார சபையின் ஆணையாளர் நாயகம் / பணிப்பாளர் நாயகம் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழங்கப்படல்வேண்டும்.

I. மேல்குறிப்பிட்ட நிறுவனத் தலைவர்கள் தமது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர், பதவி உட்பட்ட விவரங்களைச் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு மற்றும் பொலீஸ் மாதிபருக்குப் பிரதிகளோடு பணியகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

II. இதன்போது, நேரடி ஒப்பந்தங்கள் (Direct Labor) முறையில் மேற்கொள்ளப்படும் திட்டம் அல்லாதபோது, பொதுவாக அறவிடப்படும் கட்டணங்களைப் பணியகத்திற்காக அறவிடல் வேண்டும்.

(அ) வர்த்தக நோக்கமற்ற சேதனப் பசளை தயாரித்தல் மற்றும் பயிர் நடுகை மூலங்களாகப் பயன்படுத்துவதற்கு ஒரு விவசாயிக்கு அதிகூடியதாக 10 கியூப்கள்வரை சேறு மற்றும் மண் களஞ்சியப்படுத்தல் பற்றும் ஏற்றிச் செல்வதற்காக (அரச பங்கினை செலுத்தாது) மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஒருவரால் அனுமதி வழங்கலாம். ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரர்கள் படிவம் 4.1 ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

III. மூலப்பொருட்களை அகற்றுவதற்கு / தோன்றுவதற்கு முன்னர் இதுதொடர்பான தகவல்களை உரிய நிறுவனத்

தலைவர்களால் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காகப் பிரகடனப்படுத்த வேண்டும். அத்தகவல்களைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கும் கொண்டுவர வேண்டும்.

IV. வழங்கவேண்டிய அகழ்வு/ ஏற்றிச்செல்லுதல் அனுமதிப் பத்திரம் மாதிரிப் படிவம் 4.2 என வழங்கப்பட்டுள்ளது. இதில், மேலே 112 இல் (கியூப் அளவை தவிர) நேரம் மற்றும் ஏற்றிச்செல்லும் கட்டுப்பாடுகள்போன்று 112(iii) கட்டுப்பாடுகளும் நடைமுறைக்குவரும். ஏற்றிச்செல்லும் கட்டுப்பாடுகளை மாவட்டச் செயலாளர்கள் மாத்திரம் இலகுவாக்கலாம். மேல்குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குப் புறம்பான தேவைகளுக்காகப் பணியகத்தின் அனுமதி பெற்றுக்கொள்வது அவசியமாகும். அதேபோன்று, அரசாங்க வருமானத்திற்குத் தீங்கான எந்தவொரு செயல்பாடும் இடம்பெறாமை தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### 5.7 பதிவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பான பொது ஆலோசனைகள்

*அனுமதிப்பத்திர பதிவொன்றைப் பேணிச்செல்லும் தேவைப்பாடு*

118. மேலே 109 முதல் 117 குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக, விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற திகதி, அமைவிடத் தகவல்கள், விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, கியூப் அளவு, சரிபார்ப்புச் சான்றிதழ் கோரிக்கை / கிடைத்த திகதி, அனுமதி/தீர்மானம் வழங்கப்பட்ட திகதி, செலுத்தப்பட்ட கட்டணம் போன்ற தகவலகள் உள்ளடங்கலாக பதிவேடொன்றை சகல அனுமதிவழங்கும் அதிகாரிகள் பேணிச்செல்லல் வேண்டும்.

(i) ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் தொடரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்குமுன்னர் இந்தப் பதிவேட்டினைப் பணியகம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்குச் சமர்ப்பித்தல் அவசியமாகும். பதிவின் பிரதியொன்று காணி பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின்கீழ் பணியகத்திற்காக அறவிடப்படும் கட்டணங்களுக்குப் பணியகத்தினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு மாதத்தில் அறவிடப்படும் அரச பங்கு மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் தொடரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் பணியகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

### 5.7.1 பதிவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் மாவட்டச் செயலாளரின் பணிப்பொறுப்பு

*மாவட்டச் செயலாளர் வினைத்திறனான பொறிமுறை ஒன்றைச் செயல்படுத்த வேண்டும்*

119. பதிவிடப்படாத இடங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை மேற்பார்வைசெய்யவும், அவற்றை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளர் மேற்கொள்ளவேண்டும். அதேபோன்று, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினாலும், பிரதேச செயலாளர்களினால் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் மாவட்டச் செயலாளருக்குச் சமர்பிக்கப்பட்டும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டச் செயலாளர் வினைத்திறனான

பொறிமுறையொன்றைச் செயல்படுத்த வேண்டும்.

(i) அதேபோன்று, தோண்டப்படும் அல்லது அகற்றப்படும் அளவுகள் தொடர்பாக மேல்குறிப்பிடப்பட்ட அடிப்படை அளவுகோல்களுக்கு உட்பட்டுக் கட்டுப்பாடுகளை விதிக்கலாம். தேவையான சந்தர்ப்பங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) மேல்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் வேறொருவிதமாகக் குறிப்பிடப்பட்டு இல்லாதபோது ஏற்றிச்செல்லப்படும் சரளைக்கற்கள், மண் அல்லது சேறு குறிப்பிட்ட காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவின் எல்லைக்கு உட்படாத நாட்டின் எந்தவொரு ஏனைய பிரதேச செயலகப் பிரிவிற்கு ஏற்றிச்செல்லும் தேவை ஏற்படும்போது அதற்காக, அகழ்வு மேற்கொள்ளப்பட்ட காணி அமைந்துள்ள பிரிவின் பிரதேச செயலாளரினால் / அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் ஏற்றிச்செல்லும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாம். அதை வழங்கும்போது திட்டத்தின் பெயர் மற்றும் பயண இலக்கு உள்ளடங்கலாக அனுமதியினை வழங்குவதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

## 06. ஆறாம் அத்தியாயம்

### அனுமதிப்பத்திரங்கள்/ தடைநீக்கக் கட்டணங்கள், வேறு கட்டணம் அறவிடல், மீளச் செலுத்துதல் மற்றும் கணக்கிலிடுதல் பற்றிய ஒரேவிதமான திறமுறை

*கட்டண அறவிடுதல் தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடுகள்*

120. சகல விண்ணப்பப்படிவங்களும் உரிய மாதிரிப் படிவத்தில், உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டு, உரிய ஆவணங்களுடன் பணியகத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டியதோடு அதற்குரிய கட்டணத்தை விண்ணப்பத்தாரர் செலுத்தவேண்டும் (34 ஆம் பிரிவு)

(i) பணியகத்தினால் தயாரிப்பு/முற்பணம் அறவிடப்படுவது தடைநீக்க அறிக்கைகளைக் கோரும்போது குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஏற்படும் செலவுகள் உள்ளடங்கலாக ஆகும்.

### 6.1 ஒரேவிதமான கட்டண முறையும் தடைநீக்கக் கட்டளையும்

*ஒன்றுபட்ட கட்டண முறைமை மற்றும் நியதிச்சட்ட அரச நிறுவனங்களின் சரிபார்ப்புக் கட்டணங்கள்*

121. அகழ்வு அனுமதி வழங்கும் செயற்பாட்டின்போது பணியகம் மற்றும் ஆவணம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்ட அரச நிறுவனங்களிலிருந்து கோரப்பட்டு சரிபார்ப்புகளுக்குத் தேவையான கட்டணங்களை விண்ணப்பதாரர்களிடம் அறவிடும் ஒன்றுபட்ட கட்டண முறைமையின் மையமான நிறுவனமாகப் பணியகம் செயல்பட வேண்டும்.

122. கட்டணங்களை அறவிடும் முறைமையை திறைசேரியின் வழிகாட்டுதலின்கீழ் பணியகம், சுற்றாடல் அமைச்சு மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் செயல்படுத்த வேண்டும்.

123. அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் வரையிலான சரிபார்ப்பு மற்றும் அனுமதிப்பத்திரங்களுக்காக உரிய நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக அறவிட வேண்டிய சகல கட்டணங்களும் பணியகத்தினால் திரட்டப்பட்டு சுற்றாடல் அமைச்சின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

124. குறிப்பிட்ட நியதிச்சட்ட நிறுவனத்தினால் இணைப்புகள் எனும் அத்தியாயத்தின் அட்டவணை 04: கட்டண வகைகள், அளவுகள் மற்றும் பாதுகாப்பு வைப்புகள்'' எனும் தலைப்பின் கீழுள்ள கட்டணங்களை அறவிட வேண்டும்.

*கட்டண வகை, அளவு மற்றும் பாதுகாப்பு வைப்புகள் மற்றும் அரச நிறுவனங்களால் கட்டணத் திருத்தங்கள் செய்யப்படலாகாது என்பதுபற்றி*

125. எந்தவொரு நியதிச்சட்ட நிறுவனமும் தற்போது அறவிடாத எந்தவொரு கட்டணத்தையும் இக்கோவை வெளியிடப்பட்ட பின்னர் அறவிடுதலாகாது. கட்டணங்கள் அதிகரித்தல் ஆகாது. கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளலாகாது. கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து, முன்பு இருந்த குறைந்தபட்சக் கட்டணம் அல்லது அதற்குக் குறைந்த கட்டணங்களை நிறுவவேண்டும். மேலும் புதிய கட்டணம் முன்பு இருந்ததைவிட அதிகமாக இருப்பின் முந்தைய கட்டணம் அறவிடப்பட்ட வேண்டும்.

126. ஆவணம் 01 இல் குறிப்பிடப்படாத நியதிச்சட்ட நிறுவனமொன்றிலிருந்து யாரேனும் சேவைபெறுநரொருவர் இந்த விடயத்தின்கீழ் சேவையென்றைப் பெற எதிர்பார்ப்பராயின், அந்த

நிறுவனம் இது தொடர்பாக செயல்படக் கூடாது என்பது பொருளல்ல. அவ்வாறான சந்தரப்பமொன்றில், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கட்டணமொன்றை அறவிடலாம் என்பதோடு அவ்வாறு அறவிடப்பட்டபின் உடனடியாகக் குறிப்பிட்ட நிறுவனங்கள் உள்ளடங்கிய ஆவணத்தில் தமது நிறுவனத்தின் பெயரை உள்ளடக்குமாறு சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்குப் பிரதியிடப்பட்டு பணியகத்திற்கு அறிவிக்க வேண்டியதுடன், அக்கட்டணத்தைக் குறிப்பிட்ட கட்டண முறைமையில் உள்ளடக்குமாறு திறைசேரியின் செயலாளருக்கு அறிவிக்க உரிய நியதிச்சட்ட நிறுவனத் தலைவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

127. சொல்லப்பட்ட கட்டணமுறையில் அனுமதிப்பத்திரம்/ தடைநீக்கல்களின் செல்லுபடியான 03 ஆண்டுகளாகும்போது பணியகத்தினால் அகழ்வு அனுமதிப்பத்திரம் உரித்துடையவரிடமிருந்து அரச உரிமம் அனுமதிப்பத்திரக் கட்டணம், களப்பரிசோதனைக் கட்டணம் மற்றும் தடைநீக்கல் கட்டணம் என்பன ஒவ்வொரு வருடத்துக்கும் வேறுவேறாக அறவிடப்படும்.

(i) அதேபோன்று இக்கட்டணம் முற்பணமாகவும் பெற்றுக் கொள்ளப்படலாம். மூன்று ஆண்டுகளுக்கு ஒரேமுறையில் பெற்றுக்கொள்ளாதபோது ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திற்கு ஒரு மாதம் முன்னர் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.

128. அட்டவணை 04 இல் வழங்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் வருடாந்தக் கட்டணங்கள் விவரங்களுடன், உரிய நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மற்றும் சேவைபெறுநர்களுக்கு வெளிப்படுத்த பணியகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### 6.1.1. உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்படும் வரிகளும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களும்

*உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறவிடப்படும் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்*

129. மாநகர சபைக் கட்டளைச் சட்டம், நகர சபைக் கட்டளைச் சட்டம், பிரதேச சபைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களினால் கைத்தொழில் வரிகள், வர்த்தக வரிகள், வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடல் தொடர்பாகக் குறிப்பிட்ட சட்டங்களில் வரம்புகள் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணங்க உள்ளூராட்சி நிறுவனச் சட்டங்களில் குறிப்பிட்டுள்ள கட்டண அளவுகளினுள் மாத்திரம் உள்ளூராட்சி நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளும். (அ.தீ. 01...)

130. கனிம அகற்றுதலுக்கு உரியதாகக் கைத்தொழில் வரி அல்லது வர்த்தக வரி ஆகிய இரண்டில் ஒரு வகை அளவுகோல்களில் உள்ளடங்குமாயின் மாத்திரம் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படலாம். அதனைத் தவிர்த்து இந்த விடயத்தின் கீழ் தற்போது அறவிடப்படும் ஏனைய சகல கட்டணங்களும் (வீதி பராமரிப்பு கட்டணம் தவிர) அறவிடுதல் நிறுத்தப்பட வேண்டும்.

131. உரிய உள்ளூராட்சி சட்டங்களில் குறிப்பிட்டுள்ள கட்டண வரம்புகள் அட்டவணை 04 இல் வழங்கப்பட்டுள்ளதோடு,

அவற்றை மாத்திரம் அரவிடுவதற்கு உளூராட்சி நிறுவனங்களை செயல்பட வேண்டும்.

### 6.1.2 அரச காணிகளை முகாமை செய்கின்ற நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் அறவிடப்படும் கட்டணங்கள்

*அரச காணிகளை முகாமைத்துவம் செய்து மேற்கொள்ளப்படும் நியதிச்சட்ட நிறவங்களினால் அறவிடப்படும் கட்டணங்கள்*

132. அரச காணிகளில் முகாமை செய்யப்படுகின்ற நியதிச்சட்ட அரச நிறுவனங்களினால் அறவிடப்படும் கியுப்களின் அடிப்படையிலான அரச கட்டணங்கள், அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வளம்சார் உற்பத்திகளை சேர்த்தல் அல்லது அகற்றுதல் தொடர்பான கட்டணங்கள், வைப்புக் கட்டணங்கள், தாபன ரீதியிலான அல்லது எவ்விதமான அல்லது மேலதிக தடைநீக்கக் கட்டணங்கள் அறவிடலானது குறித்த நியதிச்சட்ட அரச நிறுவனங்கள் சார்பில் பணியகத்தினாலே மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) இக்கட்டணங்கள் வருடாந்தம் அல்லது மாதாந்தம் அகழ்வு செய்பவரிடம் இருந்து அறவிட்டுக் கொண்டு அவ்வாறு அறவிடப்பட்ட தவணைக்கட்டணங்கள் / கட்டணங்கள் / கியுப் அளவுகள் தொடர்பாக நிர்ணயித்து பணியகத்தினால் தொடர்புடைய நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(ii) பணியகத்தினால் அரசுரிமைகளை அறவிடலான தொடர்புடைய கனிப்பொருளின் உற்பத்தியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அரச காணிகளில் கனிப்பொருட்களை அகற்றுதல் தொடர்பில் கட்டணங்களை அறவிடும்போது தொடர்புடைய கனிப்பொருளை அகற்றுவதற்கு பாத்திரமான வெறும் அவகாசமற்ற உறுதிக் கனவளவைக் கொண்டு கட்டணங்களை கணிப்பீடு செய்ய வேண்டும்.

133. மூலப்பொருட்களை அகற்றுதல் சார்பாக அரச கட்டணம் / அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் /அரச சேவைக் கட்டணம் (அரசுரிமைகள் அல்லாத) அறவிடும் சந்தர்ப்பங்களில் அரச காணியொன்றில் மேற்கொள்ளும் அகழ்வொன்றின் போது குறித்த அகழ்வுக்குப் பாத்திரமாகும் நில அளவுக்காக காணிப் பயன்பாட்டுத் குத்தகை அறவிடப்படலாகாது.

*குத்தகைக் கட்டணங்களை மதிப்பீடு செய்தல்*

(i) ஆயினும், அகழ்வின் பின் அதற்கு இணையாக யாதேனும் காணிப் பயன்பாடு இருப்பின் குறித்த பயன்பாட்டுக்காக குத்தகை அறவிடுவதற்காக அரசின் விலை மதிப்புத் திணைக்களத்தினால் இவ்வட்டவணைக்கு உரியதாக அறிமுகப்படுத்தியுள்ள கட்டண அட்டவணையை பயன்படுத்த வேண்டும். (அரசின் விலைமதிப்புத் திணைக்களத்தால் 2021.09.30 ஆம் திகதிக்கு முன்னராக இக்குத்தகைகளை அறிவிக்க வேண்டும். (விலை மதிப்புக்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தற்கு சமர்ப்பிக்க வேண்டியதில்லை)

*வைப்புப் பணங்கள்*

134. அரச காணிகள் முகாமை செய்யப்படும் நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்கள் புனர்வாழ்வளிப்பது அல்லது பாதுகாப்பு அலுவல்களுக்காக வைப்புத் தொகையொன்றை நிறுத்தி வைத்துக் கொள்ளலாம். அத்தகைய கட்டணங்களும் அட்டவணை 04 இல் காட்டப்பட்டுள்ளது.

### 6.1.3 ஒரேவிதமான கட்டண முறையில் உள்ளடங்காத கட்டணங்கள்

*ஒற்றைக் கட்டண முறையில் உள்ளடங்காத கட்டணங்கள்*

135. ஒற்றையான கட்டண முறையானது அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட பின் அவ் வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கு தேவையான வேறு தடைநீக்கங்களுக்கு உரியதானது. குறித்த கட்டணங்களை தொடர்புடைய நிறுவனங்கள் முன்போலவே அறவிடலாம். அதன்படி காணிப் பயன்பாட்டுக் குத்தகை, சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வெடிக்கும் பொருட்கள் அனுமதிப் பத்திரங்களும், உள்ளூராட்சி நிறுவனங்களினால் வழங்கப்படும் வர்த்தக, கைத்தொழில் அல்லது வியாபார அனுமதிப்பத்திரங்களுக்காக கட்டணங்கள், மற்றும் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதிகளுக்கான வைப்புக் கட்டணங்களையும் அறவிடல் குறித்த நிறுவனங்களினாலே மேற்கொள்ளப்படல் வேண்டும். வெடிக்கும் பொருட்களை பெற்றுக் கொள்ளும் போது அதற்காகத் தேவையான தொகைகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அகழ்வு செய்பவர்களிடமிருந்து அறவிட வேண்டும். அதேபோன்று "பதிவு செய்யப்படாத" இடங்களில் நிலமும் செயல்களுடன் தொடர்பாக அனுமதிப் பத்திரங்கள் / தடைநீக்கங்களுக்காகவும் "ஒற்றை கட்டண திறமுறை ஏற்புடையதாகாது.

### 6.1.4 புனர்வாழ்வளிப்பு அல்லது மீளத்தாபித்தல் பணிகளுக்கான பாதுகாப்பு வைப்புகள்

136. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கருங்கல், மண், சரளைக்கல் மற்றும் மண் வழங்குவதை மேற்கொள்ளும் வீதிகளை குறித்த அதிகாரசபையின் செலவிலே பராமரிக்க வேண்டியதுடன் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் காலத்தினுள் வீதிச் சீர்திருத்தங்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும்.

*வீதிகளை மீள்தாபித்தல்*

137. அரச காணிகளை முகாமை செய்யும் நியதிச்சட்ட முறையிலான அரச நிறுவனங்களினால் புனரமைப்புகள், பராமரிப்புகள், அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வைப்புப் பணத்தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அகழ்வு முடிவடைந்த திகதி முதல் 45 நாட்களுக்குள் தொடர்புடைய நிறுவனங்களினால் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புப் பணத்தொகையை கணிப்பீடு செய்து பணியகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

*உள்ளூராட்சி நிறுவனங்கள் வசமான வீதிகளில் வீதி மீள்தாபித்தல் பணத்தொகையை பெருந்தெருக்கள் அமைச்சினால் தீர்மானித்தல்*

138. உரிய உள்ளூராட்சிச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள்

(i) உள்ளூராட்சி நிறுவனங்கள் வசமான வீதிகளில் கருங்கல், மண், சரளைக்கல் மற்றும் மணல் கொண்டு செல்லுதல் தொடர்பாக போக்குவரத்துத் தூரங்களை கவனத்திற் கொண்டு பராமரித்தல் தொகையொன்று அறவிடலாம். அத்தொகையை பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்து அந்தந்த வீதிகளுக்கு ஏற்புடையதாகும் வகையில் 2021.09.30 ஆம் திகதிக்கு முன்னராக அறிவிக்க வேண்டும். அதன்படி உள்ளூராட்சி நிறுவனங்களினால் வீதிகளுக்காக அறவிடப்படும் பராமரிப்பு பணத்தொகையாக பெருந்தெருக்கள் அமைச்சினால் தீர்மானிக்கும் கட்டணத்தை மட்டும்

அறவிட வேண்டும். யாதேனும் பராமரிப்பு அவசியப்படாவிட்டால் அல்லது பராமரிப்புக்கு பின்னராக ஏதேனும் தொகை மீதியாகுமாயின் அதனை மீளச் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும் தற்போதைக்கு இதுபோன்று பணத்தொகை அறவிடாத உள்ளூராட்சி நிறுவனங்களினால் அவ்வாறு பணம் அறவிடுவது எதிர்பார்க்கப்படமாட்டாது.

*பொது வைப்புக்களாக உபயோகித்து அகழ்வுகள் செய்யப்பட்ட காணிகளை புனரமைத்தல்*

139. அகழ்வு அனுமதிப்பத்திரக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட அகழ்வு நிலங்களை புனரமைக்கும் திட்டத்தின்படி குறித்த திகதிக்கு முன் அந்த நடவடிக்கையை எடுக்காத அல்லது அவ்வாறான ஒரு திட்டமொன்றை சமர்ப்பிக்கும் தேவையிராத ஆயினும் அகழ்வு இடங்களை புனரமைக்க வேண்டிய போது அப்பணத்தை நிறுத்தி வைத்திருக்கும் அதிகாரிகள் அரசின் பெறுகை நடைமுறையை பின்பற்றி குறித்த புனரமைப்பு செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

(i) அனுமதிப்பத்திரங்களின் / தடைநீக்கங்களின் செல்லுபடிக் காலம் 01 வருடமாக இருக்கும் போது அரச காணிகளை முகாமை செய்யும் அரச நிறுவனங்களினால் பாதுகாப்பு வைப்புக்கள் தொடர்பில் மேற்படி செயல் நெறியை கையான முடியும். செல்லுபடிக் காலம் 03 வருடங்களாயின் புனரமைப்பு வேலைகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என சுற்றாடல் அதிகார சபை சுற்றாடல் அழுத்தங்களை மதிப்பீடு செய்த கருத்திட்டங்களுக்காக சுற்றாடல் அதிகாரசபையினாலும் வேறு சந்தர்ப்பங்களின் போது பணியத்தினாலும் குறித்த அரச காணிகளை முகாமை செய்யும் நிறுவனங்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்கப்பட வேண்டும

### 6.1.5 அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் /அரச உரிமம்

*அரசுரிமை முற்பணங்கள்*

140. அறவிடப்படும் அரசுரிமைகளை செலுத்த தவறும் பட்சத்தில் அத் தொகைகளை தீர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அதேவேளையில் அரசுரிமை முற்பணங்களை அறிவிட வேண்டும். அதன்படி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு முன் அரசுரிமை முற்பணங்களை செலுத்த வேண்டியதுடன், முற்பணத் தொகை எவ்வளவு என்பதை பணியகம் தீர்மானிக்க வேண்டும். பணியகத்தினால் அரசுரிமை முற்பணப் பதிவேடுகளும் பேணப்பட வேண்டும். (கட்டளை 33)

*அரசுரிமை*

141. தேர்ச்சி பெற்ற அகழ்வுகள் “அ” மற்றும் “ஆ” தொகுதிகள் மற்றும் தொழில்நுட்பம்சார் அகழ்வுகள் “இ” மற்றும் “ஈ” தொகுதிகளின் கீழ் அகழ்வு செய்யப்படும் கனிப்பொருட்களுக்காக ஏதேனும் ஓர் ஆண்டுக்குரிய அரசுரிமையை அடுத்த ஆண்டின் ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும். தொழில்நுட்ப ரீதியான அகழ்வுகள் அ, ஆ மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் அ, ஆ, மற்றும் இ தொகுதிகளுக்காக யாதேனும் ஒரு வருடத்தின் யாதேனுமொரு காலாண்டுக்குரிய அரசுரிமையை அடுத்த காலாண்டின் 30 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும்.

*அரசுரிமை செலுத்தப்படாமைக்கான*

142. குறித்த திகதிக்கு முன்னராக அரசுரிமை கட்டணங்களை செலுத்தத் தவறும் அனுமதிப்பத்திரம் பெறுநர்கள் 20% தண்டப்

*தண்டங்கள்*

பணம் செலுத்துவதற்கு உட்படுத்தப்படுவர். விற்பனவுகளிலிருந்து அல்லது சுரங்க உற்பத்திகளின் அளவு பற்றி நிர்ணயிக்கப்பட்ட வர்த்தக பெறுமதியின்படி அறவிடப்படும் அரசுரிமை மற்றும் அப்பெறுமதிகளின் சதவீதங்கள் இணைப்பு அத்தியாயத்தின் 02 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. (கட்டளைகள் 33 (4))

## 6.2 மீளச் செலுத்துதல் மற்றும் கணக்கிலிடுதல்

*நியதிச்சட்ட முறையிலான நிறுவனங்களுக்கு கட்டணங்களை பகிர்ந்தளித்தல்*

143. திறைசேரியினால் வருமானத் தலைப்பு வழங்கப்பட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு மாதத்திற்குமான அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள், சுற்றாடல் அமைச்சினால் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக வரவு வைக்கப்பட வேண்டும். இதன்போது காசோலைகள் அல்லது குறுக்குக் குறிப்புகளின் மூலம் உரிய பண அனுப்புகைகளும், திறைசேரியினால் வருமானத் தலைப்பு வழங்கப்படாத நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக காசோலைகளின் மூலமாக பண அனுப்புகைகளும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(i) அதேபோன்று பணியகம் சார்பில் கட்டணங்களை அறவிடும் நிறுவனங்களுக்கும் பணியகத்தினால் நிர்வாகச் செலவுகள் வழங்கப்பட வேண்டும்.

144. சுற்றாடல் அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் பணத்தொகைகள் மற்றும் அத்தொகைகளை மீளச் செலுத்துதல் / வகுப்பீடு செய்தல் சார்பாக பயன்படுத்தப்படும் படிவத்தை சுற்றாடல் அமைச்சின் ஒத்திசைவுடன் தொடர்புடைய நியதிச்சட்ட நிறுவனங்களால் ஆக்கப்பட வேண்டும்.

(i) தமது நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்கள் / அறவீடுகள் உரியவாறு கிடைத்துள்ளதா என்பதை பணியகத்தோடும் சுற்றாடல் அமைச்சோடும் தொடர்பு கொண்டு அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தொடர்புடைய அரச நியதிச்சட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 07. ஏழாம் அத்தியாயம்

### சுற்றாடல் ரீதியான பிரச்சினைகள், மக்களின் எதிர்ப்புகளை முகாமை செய்தல், கண்காணித்தல் மற்றும் குறுகிய கால செயன்முறைகள்

### 7.1 சுற்றாடல் ரீதியான பிரச்சினைகளை குறைத்தலும், தீர்த்தலும்

*அகற்றுதல் நிலங்களை தெரிவுசெய்யும்போது சுற்றாடல் சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளல்*

இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான அநேகமான வளங்கள் சுற்றுசூழலிலிருந்து பெறப்படுகின்றன. ஆகவே நாட்டின் அபிவிருத்தி நிலையானதாகப் பேணிக்கொள்வதற்கு சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு முக்கியமாகும். அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாகச் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கண்டறிதல் மற்றும் விவரிப்பது போன்று எதிர்மறையான தாக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகச் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பிடும் செயல்பாடு மற்றும் அடிப்படைச் சுற்றாடல் பரிசோதனை ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

*ஆற்றங்கரைப் பாதுகாப்பு*

145. அகற்றுதல் செயல்பாடுகளினாலான சுற்றாடல் தாக்கங்கள் காரணமாகச் சுற்றாடல்போன்று சமூகச் சிக்கல்கள் பல ஏற்படலாமெனத் தெளிவாக அவதானிக்கப்படுகின்றது. அந்தச் சிக்கல்களைக் குறைத்துக்கொள்வதற்காகக் கீழ்வருமாறு செயல்பட வேண்டும்.

(i) அகழ்வு இடங்களைத் தெரிவுச்செய்யும்போது அப்பிரதேசத்தின் பூமியின் தன்மை, நிலத்தன்மை, உயிரினப் பல்வகைத்தன்மை, புவியியல், நீர் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டியதோடு, மிகவும் உணர்த்திறனான பிரதேசங்கள் அகழ்வுகளுக்காகப் பயன்படுத்தலாகது.

*சுற்றாடலைப் பராமரித்தல்*

(ii) அகழ்வுக்காகப் பாரிய நிலப்பிரதேசங்களைப் பயன்படுத்தும்போது ஒட்டுமொத்த நிலப்பகுதிக்கும் பொருத்தமான சுற்றாடல் ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று மறுசீரமைப்புத் திட்டத்தினையும் ஒட்டுமொத்தப் பிரதேசத்திற்கு ஏற்றதாகத் தயாரிப்பதற்குக் கருத்திட்ட முன்மொழிவு நிறுவனம் செயல்பட வேண்டும்.

(iii) அகழ்வு நடவடிக்கைகளுக்காகத் தாவரங்களை அகற்றுதல் மேற்கொள்ளும் பிரதேசங்களில் அதற்குப் பதிலாக மீண்டும் மரநடுகை செய்தல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். மரநடுகை அக்காணியிலேயே மேற்கொள்ள இயலாத சந்தர்ப்பங்களில் அதற்குப் பதிலாக வேறேனும் பிரதேசங்களில் மரநடுகை மேற்கொண்டு அவற்றைப் பராமரிப்பதற்கு அகழ்வு மேற்கொள்பவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அகற்றப்படும் ஒவ்வொரு மரத்திற்காகவும் மரநடுகைச் செயற்பாடொன்றை மேற்கொண்டு பராமரித்தல் அகழ்வு மேற்கொள்பவர்கள் அல்லது கருத்திட்ட முன்மொழிவு நிறுவனம் மேற்கொள்ள வேண்டியதோடு, அது முறையாக நிறைவேறுதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல் பணியகம் மற்றும் காணியின்

உரிமம்கொண்ட நியதிச்சட்ட நிறுவனமும் பொறுப்பாகச் செயல்பட வேண்டும்.

(iv) மரநடுகை செய்து மறுசீரமைக்கப்பட இயலாத காணிகள் வேறேதும் பயனுள்ள செயல்பாடுகளுக்காகப் பயன்படுத்த வேண்டும். உதா: நீர்த்தேக்கங்களை அமைத்தல், சூரியசக்தி நிலையங்கள், மிதக்கும் சுற்றாடல் நேயமிக்க ஹோட்டல் தொகுதிகள். அநேகமான திட்ட முன்மொழிவாளர்கள் அகழ்வு நடவடிக்கையின் பின்னர் மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுவதால் இது தொடர்பாக முறையான தொடராய்வு மேற்கொள்ளுதல் பணியகத்தினால் மேற்கொள்ளபடல் வேண்டும். அகழ்வுச் செயல்பாடுகளுக்கு இணையாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கருத்திட்ட முன்மொழிவாளர்களை ஈடுபடுத்துவது பணியகத்தின் பொறுப்பாகும்.

ஆற்றங்கரையோரப் பாதுகாப்பு

(v) ஆற்றங்கரைகளைப் பாதுகாத்துக்கொண்டு நிலைபேறாக மணல் அகற்றுதலுக்காக தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் பணியகத்தினால் செயல்படுத்த வேண்டியதோடு, பணியகத்தினால் செயல்படுத்தப்படும் "பசுமை மணல் நிலங்கள்" (அட்டவணை 04 ஐப் பார்க்கவும்) செயல்திட்டத்தை மீண்டும் வலுவூட்டுவதற்காக மற்றும் அத்திட்டம் செயல்படும்போது ஏற்பட்ட குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்

## 7.2 பாரிய அளவிலான அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களும் புவி வளங்களைப் பயன்படுத்தலும்

146. அரசாங்கத்தினால் செயல்படுத்தப்படும் பாரியளவிலான திட்டங்களின் சாத்தியக்கூறு பகுப்பாய்வுகளின்போது அதற்குத் தேவையான கருங்கல், மண், மணல் மற்றும் சரளைகற்கள் அகழ்வுக்காகப் பொருத்தமான நிலங்களைக் கருத்திட்ட முன்மொழிவாளர் தெளிவாகக் கண்டறிய வேண்டியதோடு அதனைத் திட்ட முன்மொழிவிலும் உள்ளடக்கித் தேசியத் திட்டமிடல் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்துத் தேவையான அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(i) பெறுகை நடவடிக்கைகளுக்காகக் கேள்வி விலைமனுக் கோரல் படிவத்தை முன்வக்கும் திகதியாகும்போது இந்த புவியியல் வளங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் தொடர்பாகப் பணியகத்தின் இணக்கப்பாட்டுடன் அரச திட்ட முன்மொழிவாளர் திருப்தியடைய வேண்டும்.

147. அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன்னர் அவ் அகழ்வு இடங்களின் கனியவளங்களைப் பொருத்தமான தொழில்நுட்பச் செயல்முறைகளைப் பயன்படுத்தி அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்குத் திட்ட முன்மொழிவாளர் அல்லது நிறுவனத்தினால் பணியகத்தின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவேண்டும்.

(i) தேசியத் திட்டமிடல் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் முன்மொழிவுகளில் இவ்வாறான நிலைமை அவதானிக்கப் பட்டால், பணியகம் மற்றும் தேசிய மாணிக்கக்கல் மற்றும் நகை ஆணையத்திற்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

148. புவியியல் வளங்கள் முழுமையாக அகற்றப்படாத இடங்கள் இருக்கும்போது புதிய சேதங்களைக் குறைப்பதற்காக, அகழ்வு மேற்கொள்ளல் இடைநிறுத்தப்பட்ட இடங்களில் மிகுதியாகவுள்ள புவியியல் வளங்ககளைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் பணியகத்தினால் எடுக்கப்படல் வேண்டும்.

### 7.3 பொதுமக்களை ஆர்ப்பாட்டங்களை முகாமை செய்தல்

*பொதுமக்கள் எதிர்ப்புகளை நிருவகித்தல்*

அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான இடங்கள் தொடர்பாகக் காரணங்களோடு அல்லது காரணமின்றி மக்கள் எதிர்ப்புகள் ஏற்படுவது சமீபத்திய காலங்களில் அநேகமாகக் காணக்கூடிய நிகழ்வாகும்.

149. நாட்டின் அபிவிருத்திச் செயல்திட்டங்களுக்குத் தேவையான கட்டிட மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளும்போது பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு மற்றும் பாதுகாப்பாக அவ் அகழ்வுகளை மேற்கொள்ளத் திட்ட செயல்படுத்துனர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

*சட்டரீதியான அனுமதிப்பத்திரங்கள் கொண்டுள்ள அகழ்வு இடங்களுக்கு எதிராக எழுப்பப்படும் மக்கள் முறைப்பாடுகளை நிர்வகித்தல்*

150. சட்டரீதியான அனுமதிப்பத்திரமொன்றைக் கொண்டுள்ள அகழ்வு செயல்பாடொன்று தொடர்பாக ஏதேனும் மக்கள் எதிர்ப்பு ஏற்படும்போது பிரதேச செயலாளரினால் பணியகத்தை, சுற்றாடல் அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தின் ஆணையாளர் ஒருவர் அல்லது செயலாளர் ஒருவர் உட்பட உரிய தரப்பினர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அக் குழுவுடன் ஒன்றிணைந்து களப்பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர், அக் குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும். அதன்போது, பணியகம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீறப்படவில்லையென உறுதிப்படுத்தப்படுமாயின், வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தும் தேவை ஏற்படாது. பரிந்துரைகள் மீறப்படாத நிலைகளிலும்கூட, சுற்றாடலுக்கு ஏதேனும் தாக்கம் ஏற்பட்டுள்ளதென அவதரிக்கும் பட்சத்தில், அது தொடர்பாக இக் குழுவானது செயல்பட வேண்டும்.

151. அக்குழுவிற்குத் தீர்மானம் எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் சோதனை அறிக்கையானது மாவட்ட மேற்பார்வைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அக் குழுவிற்கும் தீர்மானம் எடுக்க இயலாதவிடத்து சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள தேசிய மேற்பார்வைக் குழுவிற்கு அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 7.4 புவி வளங்களை அகழ்தல் பற்றிய தேசிய கண்காணிப்புக் குழு

அகழ்வுச் செயல்பாட்டைச் செயல்படுத்தப்படும்போது ஏற்படும் தடைகள் மற்றும் சிக்கல்கள் என்பவற்றைத் தீர்ப்பதற்காகவும், அச் செயல்பாடானது வினைத்திறனாகச் செயல்படுத்த வசதியளிப்பதற்குமாக புவியியல் வளங்கள் அகழ்வு தொடர்பான

தேசிய / மாவட்ட மேற்பார்வை குழுக்கள் நிறுவப்படும்.

152. மாவட்டச் செயலாளரின் தலைமையில் மற்றும் உரிய நியதிச்சட்ட நிறுவனப் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக "புவியியல் வளங்கள் அகழ்வு தொடர்பான மாவட்ட மேற்பார்வைக் குழு" நிறுவப்பட வேண்டும். பணியகத்தின் மாவட்ட அகழ்வுப் பொருளியலாளரினால் குழுக்களின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதோடு, இக்குழுக்கள் மாதாந்தம் ஒன்றுகூட வேண்டும். மாவட்ட மேற்பார்வை குழுவினால் தீர்த்துக்கொள்ள முடியாத விடயங்கள் இருப்பின் அவை சுற்றாடல் அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள தேசிய மேற்பார்வைக் குழுவிற்கு முன்வைக்க வேண்டும்.

*புவியியல் வளங்கள் அகழ்வு தொடர்பான தேசிய மேற்பார்வைக் குழுவை நிறுவுதல்*

153. சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி, நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசன, காணி, வனச்சீவரசிகள் மற்றும் வானவியல் பாதுகாப்பு மற்றும் நிதி போன்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் செயலாளர்களினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் மற்றும் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் "புவியியல் வளங்கள் அகழ்வு தொடர்பான தேசிய மேற்பார்வைக் குழுவில்" உள்ளடங்க வேண்டும். இக் குழுவானது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒன்றுக்கூட வேண்டும்.

(i) 47 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவ விவரங்கள் பதிவுச் சுற்றாடல் அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற பின்னர் தேசிய மேற்பார்வைக் குழுவினால் ஒவ்வொரு காலாண்டிலும் ஒன்றுகூடி ஆவணம் தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ள வேண்டும். மேலும், தீர்க்கப்படாத சிக்கல்கள் இருப்பின், அவை தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) இடைக்கால ஏற்பட்டாக முதலாம் காலாண்டில் மாதாந்தம் ஒன்றுகூட வேண்டும். அதில் விண்ணப்பப்படிவத் தகவல்கள் பதிவின் இணை ஆவணமொன்று பணியகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லுதல் தொடர்பாக காவல்துறையின் அதிகாரங்கள்*

154. மணல், மண் மற்றும் சரளைக்கற்கள் அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லுதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாகக் குறித்த ஒவ்வொரு பிரிவுகளில் காவல்துறை நிறுவனங்களை அறிவூட்டல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக சகல பொலிஸ் நிலையங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கும் உத்தியோகத்தர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். இதற்காகப் பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்வுகள் மற்றும் செயலமர்வுகள் நடத்துதல் இலங்கை காவல்துறையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

155. விசேடமாக மண் மற்றும் சரளைக்கற்கள் ஏற்றிச்செல்லும்போது உரிய அனுமதி மற்றும் உரிமைப் பத்திரங்கள் இருப்பதைப் பொலிசார் தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

### 7.5 குறுகியகாலச் செயன்முறைகள்

*அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பட்டை வினைத்திறனுடன் மேற்கொள்ளல்*

<u>நுகர்வோர் நேய சேவைப் பிரிவுகள் "ஆன்லயின் வன் ஸ்டொப் ஸொப்" தாபித்தல்</u>

புவிசார் வளங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டின்போது விண்ணப்பதாரர்களுக்கு அதிக அளவிலான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது கணிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி விண்ணப்பதாரர்களுக்கு இலகுவாக மற்றும் குறுகிய காலத்திற்குள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு புதுப்பிக்கப்படும்

156. புவிசார் வளங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும்போது அச் செயற்பாட்டினை வினைத்திறனாகச் செய்வதற்கு நுகர்வோர் நேய சேவைப் பிரிவு மற்றும் "ஆன்லயின் வன் ஸ்டொப் ஸொப்(Online One Stop Shop)" 04 மாதங்களுக்குள் தாபித்தல் பணியகத்தினால் செய்தல் வேண்டும் விண்ணப்பப் படிவங்களை வழங்குதல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக கணனி தொழில்நுட்பம் மற்றும் ஆன்லயின் முறையைப் (Online system) பயன்படுத்துதல் வேண்டும்.

157. சேவைபெறுநர்களுக்கு ஆன்லயின் முறையில் தமது விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க இயன்றவாறு மற்றும் விண்ணப்பப்பத்திரம் தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆன்லயினில் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் இந்த ஆன்லயின் முறையை முற்றுமுழுதாகச் சேவைபெறுநர்கள் நேய விதத்தில் ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

158. இந்த "ஆன்லயின் வன் ஸ்டொப் ஸொப் (Online One Stop Shop)" செயற்பட தொடங்கியதோடு நாட்டின் எந்தவொரு பிரதேச / மாவட்ட செயலாளர் அலுவலகமொன்றில் மற்றும் பணியகத்தின் எந்தவொரு அலுவலகத்தில், புவிசார் வளங்கள் அகழ்வு, ஏற்றிச்செல்லுதல் மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க இயன்றவாறு வலையமைபில் உள்ளடக்குவதற்கு பணியகத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அதேபோன்று பணியகத்தினால் அதற்கான அதிகாரங்களையும் பயிற்சியையும் அந்நிறுவனங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

**அகழ்வு இடங்களை தொடராய்வு செய்தல்**

சகல அகழ்வு இடங்களையும் கணிப்பீடு செய்தல் மற்றும் சுற்றாடல் தொடராய்வு நடவடிக்கைகளை உரியவாறு நடமுறைப்படுத்துவதன்மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகப் புவிசார் வளங்களை நிலைபேறான விதத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

*சகல அகழ்வு இடங்களினதும் மேற்பார்வை மற்றும் தொடரய்வு*

159. சகல அகழ்வு இடங்கள் தொடர்பாகப் பின்னாய்வுப் பணியகத்தின் தலைமையில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, வடமேல் மாகாணச் சுற்றாடல் அதிகாரசபை (சந்தர்ப்பத்திற்கேற்றவாறு) உட்பட அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது தொழில்நுட்ப ரீதியில் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் உள்ளடங்கும் குழுவொன்றினால் செய்துகொள்ளுதல் வேண்டும்.

(i) அம் மேற்பார்வை / ஆய்வுகளைக் காணிகள் நுகர்வு கொள்கைகள் திட்டமிடல் திணைக்களத்திற்கும் அனுப்பவைக்க வேண்டியதோடு அத் திணைக்களத்தினால் இவ்வாறாக "P1P2P3 வகைப்படுத்தல் ஆவணத்தை" புதுப்பித்தல் வேண்டும்.

(ii) பணியகத்தினால் கண்காணிப்பு அறிக்கைக்கமைய ஏற்றுக்கொள்ளக்கூடிய சிக்கலான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அந் நடவடிக்கைகள் தொடர்பாக விபரங்கள் உரிய நிறுவனங்களுக்கு பிரதியோடு அனுமதிப்பத்திரதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

160. சுற்றாடல் பரிந்துரை, சூழல் தாக்கங்கள் மதிப்பீடு அல்லாத ஆரம்பச் சுற்றாடல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் தொடராய்வு நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை / கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் உப உத்தேச நிறுவனங்கள் / சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை / வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் / கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

161. அகழ்வு மற்றும் சுற்றாடல் பாதிப்புத் தொடர்பாக காணியின் உரிமை / முகாமைத்துவம் வகிக்கும் நிறுவனங்களினால் தொடராய்வுப் பணிகள் செய்தல் வேண்டும். அதற்கான உரிய அறிவுறுத்தல்கள் பணியகம் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

162. பணியகத்தினால் தொடராய்வு செயற்பாட்டை உரியவாறு வலுவாக செயற்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பணியகத்தினுள் தேவைப்படும் பணிக்குழாம் மற்றும் பௌதீகக் கொள்ளளவு விருத்திகளை உடனடியாகச் செய்தல்வேண்டும்.

163. நாடுபூராகவும் உள்ள சகல அகழ்வு இடங்களையும் களப் பரிடசைக்கு உட்படுத்தி அனுமதிப்பத்திர இணக்கப்பாட்டை பரீட்சிப்பதற்காக டிஜிடல் தரவுத் தொகுதியொன்று பணியகத்தினால் உருவாக்குதல் வேண்டும். அதன்மூலம் மக்களுக்குத் தொல்லையான, சுற்றாடலுக்குப் பாதகமான மற்றும் சட்டவிரோத அகழ்வு இடங்களை இடைநிறுத்துதல் வேணடும். தரவுகளைப் புதுப்பிப்பதற்காக உரிய தகவல்கள், காணி பயன்பாட்டு கொள்கைகள் திட்டமிடல் திணைகளத்திற்கும் அனுப்புதல் வேண்டும்

**இணைப்புகள்**